Registered as a news paper.

பக்கங்கள்: பதினான்கு

விலை ரூபா 10.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 24 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 9 (07.04.2006) வெள்ளிக்கிழமை இதழ் 189

# புலிகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதற்கு மகிந்த உறுதிமொழி!

## எரிக் சொல்ஹெய்ம் தகவல்


கொழும்பு —

ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களுக்குச் செல்லும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அமைய - பூரண பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று மாலை வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது வெளியிட்டார்.

ஜெனிவாவுக்குச் செல்லும் தமது பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவான உத்தரவாதத்தை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பாக விடுதலைப் (14 ஆம் பக்கம் பார்க்க)



## சமாதான முயற்சிகளை நோர்வே தொடரும்!

### பௌயர் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு நோர்வே தொடர்ந்தும் தமது ஒத்துழைப்பை வழங்கும் என நோர்வேயின் புதிய சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் உறுதியளித்தார்.

நேற்று நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், பௌயர் இருவரும் ஜனாதிபதி (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்லறி தாக்குதலில் போராளி உயிரிழப்பு

திருகோணமலை —

மாங்கேணியிலுள்ள இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆட்லறித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் கொல்லப்பட்டதாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை பனிச்சங்கேணியிலுள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் ஒன்றின்மீது சுமார் 40 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய குழுவினர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகள் முறியடித்தபோது 3 துணை ஆயுதக் குழுவினர் படுகாயமடைந்தனர். இவர்கள் கிரிமிச்சை இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் (14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நேரத்தை மாற்ற அமைச்சரவை அங்கீகாரம்!

கொழும்பு —

இலங்கையின் நியம நேரத்தை எதிர்வரும் 14ஆம் திகதி முதல் அரை மணிநேரம் பின் தள்ளி வைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரச சேவைகள் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க முன்மொழிந்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 14ஆம் திகதி தமிழ் சிங்கள புதுவருட தினத்தன்று இரவு முதல் நேரம் பழைய (14 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய இதழில்

## கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் செவ்வாயன்று கிளிநொச்சி வருகிறார்!

## நோர்வேக்கு எதிராக

### இன்றைய இதழில்


- ❁ க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான க.சந்திரகுமாரியின் தமிழ் மற்றும் க.கனகேஸ்வரனின் நாடகமும் அரங்கியலும் மாதிரி வினாத்தாள்கள்.
- ❁ சிறுவர் அரங்கம் - துருவன் குறுக்கெழுத்துப் போட்டி - 4, பொது அறிவுப் போட்டி - 4 இல் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரங்கள்.


## செவ்வாயன்று கிளிநொச்சி வருகிறார்!

கொழும்பு —

இலங்கை போர்நிறுத்தக் கண்கா ணிப்புக் குழுவின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் எதிர்வரும் 11 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்ய வுள்ளார்.

இவர் விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து போர் நிறுத்த உடன்பாடு அமுலாக்கம் மற்றும் இரண்டாம் கட்ட ஜெனிவா பேச்சுக்கள் தொடர்பாக கலந்துரையாடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராக கடந்த (14 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேக்கு எதிராக இன்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு —

நோர்வே அரசுக்கு எதிராக கொழும்பில் இன்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப் போவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அறிவித்துள்ளது.

நோர்வே எனும் பக்கச்சார்பான சமாதான அனுசரணையாளர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவோம் எனும் தொனிப்பொருளில் இன்று பிற்பகல் 2.30மணிக்கு கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஊடகப் (14 ஆம் பக்கம் பார்க்க)

# புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்களை விடுவிக்க உருக்கமான வேண்டுகோள்



கொழும்பு —

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அவர்களது உறவினர்கள் உருக்கமான வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கொழும்பு அலுவலகத்தில் கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதன்போது உறவினர்கள் மேலும் தெரிவித்ததாவது -

கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக இதுவரை (14 ஆம் பக்கம் பார்க்க)



## வெளியுறவு அமைச்சு செயலர் நேற்று புதுடெல்கிக்கு விஜயம்!

புதுடெல்கி —

இலங்கை வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் பாலிகஹார தலைமையிலான உயர் மட்ட அரச அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் புதுடெல்கிக்கு விஜயம் செய்தது.

நேற்றுமுன்தினம் இரவு புதுடெல்கி சென்றடைந்த இந்தக்குழுவில்- நிதியமைச்சின் செயலாளர் பீ.பி. ஜெயசுந்தர, அரச சமாதான செயலகப்பணிப்பாளர் ஜோன் குணரட்ன ஆகியோரும் சென்றிருந்தனர்.

இவர்களுடன் பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் கோத்தபாய ர் (14 ஆம் பக்கம் பார்க்க)


மாபெரும் யாழ்.வர்த்தக கண்காட்சி - 2006
பண்டிகை காலத்தைக் கொண்டாடுங்கள்!
காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை இடம்: யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# குருதிக்கொடையாளர்களை அதிகரிப்பது குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம்—

குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் - நாளுக்கு நாள் இரத்தத்தின் தேவை அதிகரித்துக்கொண்டு செல்வதால், தன்னார்வக் குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கையை இரத்த வங்கியிலும், நடமாடும் இரத்தான முகாம்களிலும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆகவே குருதிக் கொடையாளர்களை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பாகவும், ஒழுங்கமைப்பாளர்களின் பங்கு எப்படி அமைய வேண்டும் என்பது தொடர்பாகவும் இந்தச் செயலமர்வில் ஆராயப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் - அனைத்து மக்களையும் தவறாது சமூகம் கொடுத்து இரத்தம் தேவையான உறவுகளின் உயிர்காக்க ஒத்துழைப்பு நல்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (47)

# குடாநாட்டில் கடும் வெப்பம்; பொதுமக்கள் பெருஞ்சிரமம்!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் கடந்த சில நாட்களாக அதிகளவான வெப்பநிலை நிலவி வருகிறது.

இவ்வாறு வழமைக்கு மாறாக அதிக வெப்பநிலை நிலவிவருவதால்- குளங்கள், கிணறுகள் பெருமளவு வற்றியதால் தண்ணீர்த்தட்டுப் பாடும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கையில்-

நேற்று நண்பகல் 12மணியளவில் 34 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. தற்போது இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுப்பதலேயே இந்த வெப்பநிலை காணப்படுகிறது. ஆயினும் இந்தக் காலநிலை இன்னும் ஒரு வாரகாலத்துக்கு நீடிக்கக் கூடும் எனவும் தெரிவித்தது. (து)

# மதுபான விற்பனை செய்த கூட்டுறவுச் சங்கத்துக்கு தண்டம்

யாழ்ப்பாணம்.

காங்கேசன்துறை வீதி - தாவடி கொக்குவிலில் இயங்கிவரும் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்தமைக்காக யாழ். மாவட்ட நீதிமன்று 8 ஆயிரம் ரூபா அபராதம்விதித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கு நேற்று யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அனுமதிப் பத்திரம் இன்றி அரசாங்க சாராயம் விற்பனை செய்தமை, பியர் விற்பனைக்காக வைத்திருந்தமை ஆகிய குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து தலா 3ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக வழங்குமாறும், தர்மப் பணமாக 5 ஆயிரம் ரூபாவை யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிடம் வழங்குமாறும் உத்தரவிட்டார். (து)

# ஆன்மீகப் பேருரை

வடமராட்சி —

பருத்தித்துறை - வியாபாரிமூலை பழவத்தை ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தானத்தில் பங்குனி உத்தரத்தையொட்டி அலங்கார உற்சவங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

இன்று மாலை 5.30 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் எம்.பி. அருளானந்தன் 'சர்வம் சக்தி மயம்' என்னும் தலைப்பில் ஆன்மீகப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவு இல்மெய்வல்லுநர் போட்டியும், சிறுவர் பூங்கா திறப்புவிழாவும் இன்று மாலை 2 மணிக்கு பாடசாலை அதிபர் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் -சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்விச் செயற்திட்ட முகாமையாளர் ஏ. பேரின்பநாதன் பிரதம விருந்தினராகவும், பற்றீசியன் தொழில்நுட்ப நிறுவன பதிவாளர் ஜி. தனசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# அடையாள அட்டை கண்டெடுப்பு

நெடுந்தீவு —

நெடுந்தீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கருணாகரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு குருநகர் சென். ஜேம்ஸ் ஆலய பங்குத் தந்தை எம்.எல். தயாகரன் தெரிவித்தார். (58)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விசால், மீராஜஸ்மின் நடித்த
சண்டைக்கோழி
கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

மெர்குரிப்பூக்கள்
பு. நேரம் : 10.30, 2.30, 6.30, 9.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பரத், சந்தியா நடித்த
காதல்
தினசரி நான்கு காட்சிகள்
கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
மாதவன், பூஜா, வடிவேல், மணிவண்ணன் நடித்த
தம்பி
14 முதல் சித்திரைப் புத்தாண்டில்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின
அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும்பலர் நடித்த
இயக்கம் : பேரரசு

கா.நே 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## நமது ஈழநாடு நடத்தும் க.பொ.த. உயர்தரம் - 2006 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான

## இலவச முன்னோடிக் கருத்தரங்கு

இடம் : யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, தம்பையா மண்டபம்.
காலம் : 11.04.2006 காலை 8.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை.
பாடங்கள் : கணக்கியல் - சாம்
பொருளியல் - இராஜேஸ்வரன்
வர்த்தகம் - பசில்

அனுசரணை வழங்குபவர்கள்:
UNIT
One Step Ahead
0773134737 / 0214590720

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி
BOC

105, Arasady Road, Jaffna.
FOR ALL ENGLISH CLASSES
LONDON ENGLISH COLLEGE
- Diploma in English — Duration : 3 Months
- IELTS — Duration : 3 Months
- Spoken English — Duration : 3 Months
- English Litterature (10, 11, 12, 13) — Duration : Annul
- English for KIDS — Duration : Annul
- Linguistics - GAQ, B.A

உங்கள் கணனிகளில் ஏற்படும் எந்த விதமான பழுதுகளையும் நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் திருத்திப் பெற்றுக்கொள்ள...
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone: 0777917610

redhat
AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
#118, Palaly Road, Thirunelvely, Jaffna.
Center for FOSS & LAMP

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Jaffna.
Leading IT Institution in Jaffna

COMMERCIAL BANK
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

## பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2006.04.12 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

### பணிநிலை

1. ஆய அலுவலர் (ஆண்கள்)
2. ஆய உதவியாளர் (ஆண்கள்)
3. சமையலாளர் (ஆண்கள்)
4. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
5. கடின உழைப்புச் சிற்றூழியர் (ஆண்கள்)

### தகைமை

பணிநிலை
1. க.பொ.த (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
2. க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
3. உள்நாட்டு உணவு வகைகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
4. சமையல் உதவியாளர் பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
5. ஆண்டு 07 கற்றிருப்பதுடன், சிற்றூழியர் பணியில் மூன்றாண்டு (03) பட்டறிவு இருத்தல் வேண்டும்.

### வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி

மேலாளர்,
ஆளணிப்பிரிவு,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

### நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்

2006.04.12 (புதன்கிழமை)
காலை 10.00 மணி

### நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :

நடுவப் பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

குறிப்பு:
- தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
- நேர்முகத் தேர்வுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட மாட்டாது. பணிநிலை வேண்டுகைகளை அனுப்பி வைக்காதோரும் தகைமைச் சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.

(4459) மேலாளர், ஆளணிப் பிரிவு, ஆயப்பகுதி.

# நோர்வேயின் அனுசரணை தொடர்ந்தால் அரசு தூக்கில் தொங்கும் நிலையேற்படும்!

## தேசப்பற்று தேசிய இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு—

நோர்வேயின் அனுசரணை தொடர்ந்தால் அரசு தூக்கில் தொங்கும் நிலை உருவாகும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதி மகிந்தவை எச்சரித்துள்ளது.

கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் உரையாற்றும்போதே டொக்டர் குணதாஸ அமரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானப் பணிகளிலிருந்து நோர்வேயை வெளியேற்றவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மகிந்த சிந்தனை மூலம் மக்கள் ஆணையை வழங்கினார்கள். அதனையும் மீறி நோர்வே பணி தொடருமானால், அரசாங்கம் தூக்கில் தொங்கும் நிலையே ஏற்படும்.

நோர்வேயை வெளியேற்றமாட்டோமெனக் கூறுவதற்கு அமைச்சர் நிமால் சிறி பால டீ சில்வாவுக்கு அதிகாரமில்லை.

கோழைத்தனமான அரசியல்வாதிகளின் தீர்மானங்களுக்கு மேலும் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை. எமது நாட்டுப் பிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்வோம்.

புலிகளுக்குச் சார்பான நோர்வே நிலைப்பாடு உச்சக் கட்டத்துக்கு வந்துவிட்டது. புலிகள் ஆயுத ரீதியாகப் பலமடைந்துள்ளனர். நோபல் பரிசைப் பெறுவதற்கே சந்திரிகா நோர்வேயின் தலையீட்டை உட்புகுத்தினார்.

தமிழ் மக்களுக்கு இலங்கை இராணுவம் இடையூறு செய்வதாகவும் எனவே, அவர்கள் இந்தியாவுக்குப் படையெடுப்பதாகவும், தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டுமென்றும் சொல்ஹெய்ம் இந்தியாவில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலும் நோர்வேயின் அனுசரணையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடரத் தீர்மானிப்பாரானால், அது பைத்தியக்காரத்தனமானதும், வெட்கமில்லாத நிலைமையுமே ஆகும். கருணா குழுவின் ஆயுதங்களைக் களைவது தொடர்பாக அடுத்த கட்ட ஜெனிவாப் பேச்சுவார்த்தைகள் அமையவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பேச்சுக்கள் வெற்றிபெற திருகோணமலையில் பேரணி





திருகோணமலை—

இலங்கையில் நிரந்தர அமைதியும், சமாதானமும் ஏற்படவேண்டும் என்றும் - ஜெனிவா பேச்சுவார்த்தை வெற்றிபெற வேண்டும் எனவும் கோரி நேற்று முன்தினம் திருகோணமலை நகரில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஒன்றுகூடி அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இது தொடர்பான மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் வகையில் திருகோணமலை மாவட்டசெயலரிடம் கையளித்தனர்.

திருகோணமலை மாவட்ட பெண்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிறுவனம் இந்தப் பேரணிக்கான அழைப்பை விடுத்திருந்தது.

இலங்கையில் நிரந்தர அமைதியும், சமாதானமும் உருவாக்கப்பட வேண்டும் எனவும், ஜெனிவா பேச்சுவார்த்தைகள் நடைபெற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மகஜரின் பிரதி திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் கையளிக்கப்பட்டது.

# வற்வரி மோசடியில் ஈடுபட்டோரின் வங்கி கணக்கை சோதனையிட அனுமதி

கொழும்பு—

வற்வரி மோசடி குற்றவாளிகளின் வங்கிக் கணக்குகளை சோதனையிட கொழும்பு கோட்டை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதியளித்தது.

வற்வரி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட 5 பேரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

உள்நாட்டு வருவாய் திணைக்கள அதிகாரி குணசிறி ஜயதிலக்க, பிரதி ஆணையாளர் ஆனந்த விக்கிரமசிங்க அபேசிட்டிய மற்றும் வர்த்தகர்கள் எஸ்.சுப்பிரமணியம், மொகமட் ஜுனைட், மொகமட் ரிஸ்வான், மொகமட் அஸ்ரப் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அனைவரது விளக்கமறியலும் ஏப்ரல் 19 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் போது இரகசியப் பிரிவு பொலிஸ் அதிகாரி பி.விஸ்வநாதன் நீதிமன்றில் முன்னிலையாகி விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு தொடர்பாக மேலும் பலர் கைது செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்துக்கு தாக்கல் செய்யப்பட்ட 20 தேசிய அடையாள அட்டைகளில் 19 அடையாள அட்டைகள் போலியானவை என்றும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களைப் பொலிஸாரின் பாதுகாப்பில் வைத்திருக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

வழக்கின் சந்தேக நபர்கள் நாட்டை விட்டு வெளியேறாத வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இரகசியப் பிரிவினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கைது செய்யப்பட்டுள்ள சுப்பிரமணியம் தரப்பில், காசோலையில் கைச்சாத்திட அனுமதி கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டது. சுப்பிரமணியத்தின் நிறுவனத்தில் பணிபுரியும் ஆயிரம் ஊழியர்களின் ஊதியம் தொடர்பான காசோலையில் அவர் கைச்சாத்திட அனுமதிக்க வேண்டும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நீதிமன்றம் இதற்கு அனுமதி அளிக்க மறுத்தது.

இதனிடையே வற்வரி மோசடி வழக்கில் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் நாட்டைவிட்டு தப்பியோடி விட்டதாகக் கூறப்படுகிறது.

பக்கீர் மொகமட் ரியாஸ், ரசீத் முர்சித், அவாம் ஆகியோர் சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்துக்கும் மொகமட் ஹூசைன் என்ற சந்தேக நபர் ஜப்பானுக்கும் தப்பியோடியுள்ளனர்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் போலிக் கடவுச்சீட்டுக்கள் மூலம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலூடே அவர்கள் தப்பியோடியுள்ளனர் என்று இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் - கப்பல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் கமில் குதுப்தீன் பற்றிய எதுவித தகவலும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வேட்பு மனு நிராகரிப்பு முகமட் தான் காரணம்

## ஐ.தே.க.செயலாளருக்கு மஹ்ரூப் கடிதம்

கொழும்பு—

கொழும்பு மாநகர சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்குக் கட்சியின் மூத்த தலைவர் எம்.எச்.முகமட்தான் காரணம் என்று மஹ்ரூப் - கட்சியின் பொதுச்செயலாளர் என்.வி.கே.வேரகொடவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வேட்பு மனுக்களை முகமட்தான் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் ஒப்படைத்ததாகவும், அப்படியான நிலையில் அவர் ஏன் கட்சியின் வேட்பாளர் பட்டியலை சரிபார்க்கவில்லை என்றும் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

வேட்புமனுக் குழப்பத்துக்கு முகமட்தான் பொறுப்பானவர் என்றும் இது தொடர்பாக கட்சியின் அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள மஹ்ரூப், கொழும்பு மாவட்டத்துக்கு இளம் தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கரு ஜயசூர்ய ஆகியோருக்கும் இந்தக் கடிதத்தின் பிரதிகள்அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# டக்ளஸ் தேவானந்தா குறித்து தகவல் சேகரித்தவர் கைது

கொழும்பு—

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவை கொலை செய்யும் நோக்கில் தகவல்களை சேகரிப்பதற்காக கிளிநொச்சியிலிருந்து கொழும்பு வந்திருந்த விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி பயணம் செய்யும் பௌத்தலோக மாவத்தையின் வீதிப்படமும், அந்த வீதியில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்ட வரைபடமும் கைது செய்யப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.


இவருக்கு பாதுகாப்பு வழங்கினாரெனத் தெரிவித்து ஈ.பி.டி .பியின் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் தெமட்டகொட பிரதேசத்தில் வசிப்பவராவார்.

தனியார் பேரூந்து ஒன்றின் நடத்துனரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்த நபரை கைதுசெய்ய முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் பேரூந்தில் பயணம் செய்தவேளை, தனது உள்ளங்கையிலும், கடதாசி ஒன்றிலும் குறிப்பெடுத்து வந்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் இவ்வாறு செய்து வந்ததனால் அவர் மீது சந்தேகம் கொண்ட நடத்து னர் பௌத்தலோக மாவத்தையில் வீதித்தடை பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம், இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் அவரை கைதுசெய்தனர். இவர் ஈ.பி.டி.பி யின் உறுப்பினரின் வீட்டிலேயே தங்கியிருந்துள்ளா என்பது குறிப்பிடத்தக்கது. (தே)

# கடற்படை நிபந்தனையை எழிலன் நிராகரித்தார்



திருகோணமலை—

திருகோணமலை மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி பெற்ற பின்பே தொழிலில் ஈடுபடமுடியும் என்று கடற்படையினர் விதித்துள்ள நிபந்தனையை திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் எழிலன் நிராகரித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைவர், கடற் கண்காணிப்பாளர் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

திருகோணமலை மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அண்மைக்காலமாக திருகோணமலை- மூதூர் பிரதேசத்தில் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் சம்பவங்கள் குறித்து, இந்தசந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

கடற்படையினரால் தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களை கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டனர்.

மீனவர்கள் தமது அனுமதியுடன் தான் மீன்பிடிக்க வேண்டும் என்று கடற்படையினர் வலியுறுத்தியுறுத்தியுள்ளமை குறித்து - எழிலனிடம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர். ஆனால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று எழிலன் பதிலளித்தார்.

# சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு இன்று

கொழும்பு—

இலங்கை சுதந்திரக்கட்சியின் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாக பல்வேறு தீர்மானங்களை எடுப்பதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்சியின் தேசிய மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று மாலை மகரகம இளைஞர் சேவை மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பி.ப 2 மணிக்கு கட்சியின் செயற்குழு, மற்றும் நிறைவேற்றுக் குழு ஆகியன கூடிய பின்னர் மாநாடு நடைபெறுமென கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கு நியமிக்க வேண்டுமென்ற பிரேரணையை இன்று நடைபெறும் கட்சியின் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தயாராக இருப்பதாக தகவல்கள் தெரிவித்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டாரெனவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# ஜீவன்குமாரதுங்கவிடம் இரகசிய பொலிஸ் விசாரணை


கொழும்பு—


விளையாட்டுத்துறை அமைச்சை தலைமையகமாக பயன்படுத்திக் கொண்டு, போலிவிசாக்கள் மூலம் ஆட்களை சட்டவிரோதமாக அமெரிக்காவுக்கு அனுப்பும் வர்த்தகத்தை நடத்தி வந்த விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன்குமாரதுங்கவிடம், இரகசிய பொலிஸார் இரண்டொரு தினங்களில் விசாரணையை நடத்தவுள்ளனர்.


போலி விசாக்கள் மூலம் ஆட்களை அமெரிக்காவுக்கு அனுப்பிய வர்த்தகத்தில் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் அனுமதியும், வழி நடத்தலும் இருந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்தமையால், அமைச்சரிடம், விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக இரகசியப் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.


இந்த வர்த்தகத்துடன் தொடர்புடைய மேலும் சிலரை கைதுசெய்வதற்காக தேடி வருவதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# தொடரை கைப்பற்றியது இந்தியா









கொச்சின்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரில் கொச்சினில் நடைபெற்ற நான்காவது போட்டியில் 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரையும் கைப்பற்றியது.

நேற்றைய போட்டியில் இங்கிலாந்து அணியில் விக்கெட் காப்பாளராக பிரியரும், மூன்றாவது போட்டியில் ஆடாத பீற்றர்சனும் மற்றும் வேகப் பந்துவீச்சாளர் ஹொகாட்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த அணி



யின் ஸ்ரரஸும், பிரியரும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் ஸ்ரரஸ் - ஸ்கோர் 10ஐத் தொட்டபோது, 7 ஓட்டங்களை மட்டும் பெற்று பதானின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பீற்றர்சன் களமிறங்கினார். சற்று நேரத்தில் பிறியர் 14 ஓட்டங்களைப் பெற்று- ஸ்ரீசந்த் வீசிய பந்தை டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து கொலிங்வூட், பீற்றர்சனுடன் இணைந்து அணியை வலுப்படுத்தினார். பீற்றர்சன் தனது வழமையான அதிரடி ஆட்டத்தின் மூலம் ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தார்.

இந்தநிலையில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 36 ஓட்டங்களைப் பெற்றிருந்த கொலிங்வூட், யுவராஜ் சிங் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பிளின்ரொப் களமிறங்கினார். அந்தவேளை சிறப்பாக ஆடி 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களை விளாசிய பீற்றர்சன், ஹர்பஜன் சிங் வீசிய பந்தை யுவராஜ் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பிளின்ரொப் 12 ஓட்டங்களைப் பெற்று யுவராஜ் சிங் வீசிய பந்தை ராவிட்டிடம் பிடிகொடுத்தும், சோலங்கி 12 ஓட்டங்களைப் பெற்று பவார் வீசிய பந்தில் போல்டாகியும் வெளியேறினர்.


இந்தநிலையில் ஜோன்ஸும், பிளக்வெல்லும் இணைந்தனர். ஆனால், 6 ஓட்டங்களை மட்டும் பெற்ற பிளக்வெல், ஷேவாக் வீசிய பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பற்றி களமிறக்கப்பட்டார். ஜோன்ஸுக்கு, பதில் ஓட்டக்காரராக ஸ்ரரஸ் களமிறங்கினார். ஜோன்ஸ் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். ஆனால், பற்றி 2 ஓட்டங்களுடன் ஷேவாக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ஹொகாட் களமிறங்கினார். அவர் 7 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட்டானார்.

இறுதியாக அன்டர்சன் களமிறங்கினார். அந்தவேளை, 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜோன்ஸும் ரன் அவுட்டானார்.

இதனால் இங்கில...து அணி 48.4 ஓவர்களில் 237 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அன்டர்சன் 1 ஓட்டத்துடன்



ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் யுவராஜ்சிங், ஷேவாக் இருவரும் தலா 2, பதான், ஸ்ரீசந்த், ஹர்பஜன், பவார் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 238 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. ஷேவாக்குடன், ராவிட் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினார்.

இருவரும் அணிக்கு நல்ல தொடக்கத்தை அளித்தனர். ஸ்கோர் 54ஐத் தொட்டபோது- 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷேவாக், பிளக்வெல் வீசிய பந்தை சோலங்கியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பதான், ராவிட்டுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். அந்தவேளை, 9 பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த ராவிட், பிளின்ரொப் வீசிய பந்தை ஹொகாட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து கைவ் களமிறங்க, 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த பதான், பிளக்வெல் வீசிய பந்தை பிரியரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து யுவராஜ் களமிறங்க, 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த கைவ், பிளின்ரொப் வீசிய பந்தை அன்டர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்து ரெய்னா, யுவராஜ் சிங்குடன் இணைந்தார். இருவரும் ஆடிய வேளை, 21 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரெய்னா, அன்டர்சன் வீசிய பந்தை பிளக்வெல்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் டோனி களம் புகுந்தார். அந்தவேளை, 6 பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்களைப் பெற்றிருந்த யுவராஜ் சிங், அன்டர்சன் வீசிய பந்தை பிறியரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ரமேஷ் பவார் களமிறங்கினார். இறுதியாக 47.2 ஓவர்களில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 238 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 7 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரை 4:0 என்ற அடிப்படையில் இந்திய அணி கைப்பற்றிக் கொண்டது.

டோனி 10 ஓட்டங்களுடனும், பவார் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.



பந்துவீச்சில் அன்டர்சன், பிளின்றொப், பிளக்வெல் மூவரும் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக யுவராஜ் சிங் தெரிவானார்.

## விளையாட்டு

## விளையாட்டுப்போட்டி

சாவகச்சேரி

தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணியளவில் சபையின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக எஸ்.அருளானந்தம் கலந்துகொள்ளவுள்ளார். (29)

## வளர்மதி விளையாட்டுக் கழகம் எல்லே போட்டியில் வெற்றி

தென்மராட்சி

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் ஒரு அங்கமாக நடைபெற்ற எல்லே போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

கடந்த மார்ச் 25, 26ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் 1:0 என்ற அடிப்படையில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

பெண்கள் பிரிவில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாவகச்சேரி தென்னகத் தாரகை விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 2:0 என்ற அடிப்படையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (24)

## யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட

# பாடசாலைகள் இடையேயான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட நல்லூர், கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய கல்விக் கோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் 15 வயது ஆண்கள் பிரிவின் ஏ பிரிவில் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மகாவித்தியாலயம், கனகரட்ணம் மத்திய மகாவித்தியாயலம் என்பனவும்,

அச்சுவேலி மத்திய கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரியும்,

சி பிரிவில் - சோமஸ்கந்தா கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியனவும்,

டி பிரிவில் - ஆவரங்கால் மகாஜன மகாவித்தியாலயம் மற்றும் கல்வியங்காடு செங்குத்தா இந்துக் கல்லூரியும் பங்குபற்றவுள்ளன.

17 வயது ஆண்கள் பிரிவின் ஏ பிரிவில் - ஆவரங்கால் மகாஜன மகாவித்தியாலயம், யாழ்.மத்திய கல்லூரி என்பனவும்,

பி பிரிவில் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மகாவித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் மற்றும் புனித சாள்ஸ் மகாவித்தியாலம் ஆகியனவும்,

சி பிரிவில் அச்சுவேலி மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, மற்றும் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயமும்,

டி பிரிவில் - சோமஸ்கந்தா கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி என்பனவும் பங்குபற்றவுள்ளன.

19 வயது ஆண்கள் பிரிவின் ஏ பிரிவில் - அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், அத்தியார் இந்துக் கல்லூரியும்,

பி பிரிவில் - யாழ்.இந்துக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, மற்றும் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் என்பனவும்,

சி பிரிவில் - யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயம் மற்றும் யாழ்.மத்திய கல்லூரி என்பனவும்,

டி பிரிவில் - கல்வியங்காடு செங்குத்தா இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியனவும் பங்குபற்றவுள்ளன.

ஆண்கள் பிரிவு தவிர இந்த முறை பெண்கள் பிரிவின் 15 வயதுப் பிரிவு மற்றும் 17 வயதுப் பிரிவுகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளும் யாழ்.வலய மட்டத்தில் நடைபெறவுள்ளன.

15 வயது பெண்கள் பிரிவில் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி மற்றும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை என்பனவும்,

17 வயது பெண்கள் பிரிவில் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் மற்றும் சோமஸ்கந்தா கல்லூரி என்பனவும் பங்குபற்றவுள்ளன.

(58)

## மேசைப்பந்தாட்டம்

நெடுந்தீவு

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் மாகாண மட்டத்திலான மேசைப் பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் யாழ்.வை.எம்.சி.ஏ உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாருக்குமான இந்தப் போட்டியில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டு மாவட்ட அணிகளும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிடத்தக்கது. (113)

# ஷேவாக்கை நீக்கும் திட்டம் எதுவும் இல்லை

## ராகுல் ராவிட் தெரிவிப்பு



கொச்சி

ஷேவாக்கை அணியிலிருந்து நீக்கும் திட்டம் எதுவும் இல்லையென இந்திய அணியின் கப்டன் ராவிட் கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் ராகுல் ராவிட் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

இந்திய அணியின் துணைக் கப்டனான ஷேவாக்கை பதவி நீக்கம் செய்யும் திட்டம் இல்லை. ஷேவாக் மோசமாக ஆடிவந்தாலும், அவர் தொடர்ந்து தொடக்க ஆட்டக்காரராகவே களமிறங்குவார். அவரின் மோசமான ஆட்டம் தொடர்ந்தால் மத்திய வரிசையில் இறக்கப்படலாம்.

ஷேவாக் சிறப்பாக ஆடினால் அது இந்திய அணியின் வெற்றிக்கு அதிக வாய்ப்பாக இருக்கும். அதைக் கடந்த காலத்தில் பல ஆட்டங்களில் நாம் பார்க்க முடியும். ஷேவாக் மீண்டும் நல்ல ஆட்டத்திறனுககு வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோமெனத் தெரிவித்தார்.

## ஏ-9 போக்குவரத்துநேர நீடிப்புக்கு
# வழித்துணை வழங்குவது குறித்து பரிசீலனை செய்வதற்கு தயார்!
## யாழ். செஞ்சிலுவைக் குழு பிரதிநிதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம்

ஏ-9 வீதிப்போக்குவரத்துநேரத்தை அதிகரிக்க வழித்துணை வழங்க விடுதலைப் புலிகளும் -அரசாங்கமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை உத்தியோகபூர்வமாகக் கேட்டுக் கொண்டால் அது குறித்து நாம் பரிசீலிப்போம் எனச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி ஐரின் புளுசியர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நமது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து கலந் துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

ஏ-9 வீதியால் பயணம் செய்யும் மக்களின் பயணத்தை இலகுவாக்கும் வகையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினராகிய நாம் முகமாலையிலும், ஓமந்தையிலும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இந்த வீதிப் போக்குவரத்து நேரத்தை அதிகரிக்கும் வகையில் எமது பிரச்சினைகளை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் உத்தியோகபூர்வமாகக் கேட்டுக்கொண்டால் அது குறித்து நாம் பரிசீலித்து முடிவெடுப்போம்.

யாழ்ப்பாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரது பணிகள் ஏனைய நாடுகளில் எமது பணிகள் இடம்பெறுவது போலச் சுதந்திரமாகவும் பக்கச்சார்பற்றதாகவும் இடம் பெற்று வருகின்றன.

பொதுமக்கள் எல்லா நேரங்களிலும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கில் ஜெனிவா ஒப்பந்தங்கள்களுக்கு ஏற்ப மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளின்போது யாழ். மாவட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பாகவும் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றது. முறைப்பாட்டாளர்களின் பாதுகாப்புக் கருதி அது தொடர்பான விபரங்களை வெளியிட முடியாது.

நாம் அவசர மனிதாபிமானப் பணிகளை மட்டுமே மேற்கொண்டு வருவதால், குடாநாட்டில் இடம் பெறும் எல்லாச் சம்பவங்களையும் எம்மால் தீர்க்க முடியாது. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

## இலங்கை கல்வி நிர்வாகசேவை
# III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

மானிப்பாய்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்கு பொது உத்தியோகத்தர் எண்ணிக்கை மற்றும் விசேட உத்தியோகத்தர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

மேற்படி பரீட்சைக்கான கல்வித் தகைமைகள் மற்றும் விபரங்கள் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும். அதன்படி, விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகக் கல்வியமைச்சு, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மேலதிக விபரங்களை கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)


# சுவீடிஸ் திரைப்படம்

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைத் திரைப்பட வட்டத்தினரது ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புகழ்பெற்ற சுவிடிஸ் நெறிகையாளர் கிங்மார் பேர்க்மனின் நெறிக்கையில் உருவான வின்ரர் லைற் (குளிர்கால ஒளி) எனும் சுவீடிஸ் மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் விடியோக் காட்சியாக அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சார்ந்த ஊடகவியல் மற்றும் பயிற்சிமையத்தில் (ஜிம்மா பள்ளிவாசல் ஒழுங்கை) இந்த திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

படக்காட்சியின் இறுதியில் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு ஆர்வலர்கள் அனைவரும் வருகைதந்து பயன் பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



நெடுந்தீவு மக்களுக்காக கியூமெடிக்கா நிறுவனத்தால் அண்மையில் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகையும், படகின் உட்புறத் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (113)

# மதுபான நிலையங்களை அகற்ற மௌனப் பேரணி

குருநகர்

குருநகர் பிரதேசத்தில் திடீரெனத் தோன்றியுள்ள மதுபான விற்பனை நிலையங்களை அகற்றக்கோரி அந்தப் பகுதி பங்குத் தந்தையின் வழிநடத்தலில் இன்று அமைதிப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றலில் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இந்த மௌனப் பேரணி யாழ். செயலகத்துக்குச் சென்று அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பதுடன் நிறைவுபெறும்.

குருநகர் பிரதேசத்தில் ஐந்து ஆலயங்கள், மூன்று பாடசாலைகள், இரண்டு முன்பள்ளிகள், பொதுச்சந்தை மற்றும் பல நலவழிக் கழகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மத்தியில் திடீரென பல மதுபான விற்பனை நிலையங்கள் தோன்றி இந்தப் பிரதேச சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளன.

எனவே, இவற்றை அகற்றுமாறு கோரியே இந்த மௌனப் பேரணி நடைபெறவுள்ளதாகவும் இதில் இந்தப் பிரதேச மாணவர்கள், கழகங்கள், சங்கங்கள் மற்றும் பொதுமக்களையும் கலந்துகொள்ளுமாறு இந்தப் பிரதேச பங்குத்தந்தை வண.பிதா எம்.எல்.தயாகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

# உலக வங்கி உதவியுடன் வீடமைப்பு
# 4 ஆயிரம் பயனாளிகளுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவு!

யாழ்ப்பாணம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டத்தில் இந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் உதவிகளைப் பெறவுள்ள 4000 பயனாளிகளுக்கு இந்த மாதம் முதலாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவிக்கையில் -

ஏற்கனவே 2004 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் 5 கிராமங்களில் 125 வீடுகள் 1 கோடி 87 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், 2005 ஆம் ஆண்டில் 79 கிராமங்களில் 1635 வீடுகள் 38 கோடி 10 லட்சம் ரூபா செலவிலும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் 2006 ஆம் ஆண்டில் 103 கிராமங்களில் 4 ஆயிரம் வீடுகள் 100 கோடி ரூபாய் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படுவதற்காக பயனாளிகள் தெரிவு இடம் பெற்றுவருகிறது.

முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு நான்கு கட்டங்களாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பயனாளிகளுக்கு வழங்கப்படும். பகுதியாகச் சேதமடைந்த வீடுகளுக்கு இரண்டு கட்டங்களாக 1 லட்சம் ரூபா வழங்கப் படும்.

அதேவேளை - இந்த ஆண்டு 103 கிராமங்கள் தெரிவாகியுள்ளன. அந் தக் கிராமங்களில் வீட்டு அழிவு மதிப் பீட்டுப் படிவங்கள் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு கணினிமயப் படுத்தப்பட்டுள்ளன.

பயனாளிகள் தெரிவுப் பட்டியல் மாகாண திட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் பொதுமக்களின் பார்வைக்காக பொது இடங்களில் வைக்கப்படவுள்ளது.

மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் 4 ஆயிரம் பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவு இந்த மாதம் முதல் வழங்கப்பட சாத்தியமுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவில் பற்சிகிச்சை பிரிவு பெருமளவு நோயாளர் நன்மை

நெடுந்தீவு

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவு வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் செயற்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கடந்த சில வாரங்களாகச் செயற்பட்டு வருவதால் பல் தொடர்பான நோயாளர்கள் நன்மையடைந்துள்ளனர்.

பற்சிகிச்சைப் பிரிவொன்று தனியாக நிறுவப்பட்டு அதற்கென உரிய உபகரணங்களும் வழங்கப்பட்ட போதும் கடந்த பல வருடங்களாக இந்தப் பிரிவு செயற்படாதிருந்தமையால் நெடுந்தீவுப் பிரதேச மக்கள் பெருமளவு பணத்தைச் செலவு செய்து யாழ். நகர் சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலை இருந்து வந்தது.

இதேவேளை தற்போது வாரமொருமுறை பல் வைத்தியர் கடமையில் ஈடுபடுகின்றமையால் பெருமளவு நோயாளர்கள் பல் தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைகளை நெடுந்தீவிலேயே பெறக் கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## மின்சாரம் தாக்கி இளைஞர் பலி

யாழ்ப்பாணம்

மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவானில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த சந்திரன் கஜன் (வயது 18) என்பவரே உயிரிழந்தவராவார்.

மின் ஆழியிலிருந்து மின்சார இணைப்பை பெற முயன்ற போதே மின் ஒழுக்கு ஏற்பட்டு இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவரின் சடலம் விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப் படைக்கப் பட்டது. (வ)

## புகைப்படம் பிடிப்பு

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணிகளின் வீரர், வீராங்கனைகளுக்கான புகைப்படங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் பிடிக்கப்படவுள்ளதால் அனைத்து வீரர், வீராங்கனைகளையும் தவறாது சமூகமளிக்குமாறு பதில் பணிப்பாளர் க.கணேசநாதன் தெரிவித்தார்.

# பெண்கள் சிறுவர் உரிமைகள் குறித்து சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு

தாளையடி

யாழ்ப்பாணம் மனித உரிமைகள் நிறுவனம் நடத்திய பெண்கள், சிறுவர்கள் உரிமை சம்பந்தமான சட்ட அறிவூட்டல் கருத்தரங்கு கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்கள் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை யில் நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கில் "மனித உரிமைகள் ஒரு அறிமுகம்" மனித உரிமைகள் செயற்பாடு, தொழிற்சட்டம், மொழி, கலாசாரம் மற்றும் உரிமைகள், மனி தாபிமான சட்டங்கள் என்னும் தலைப்புகளில் கருத்துரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத் துறை விரிவுரையாளர் எம். சுதர்சன் நிகழ்த்தினார்.

இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள், அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச் சட்டம் மற்றும் சித்திர வதையிலிருந்து பாதுகாப்பு, குடும்பச் சட்டம், பெண்கள், சிறுவர் உரிமைகள் உள்ளடங்கலான தலைப்புகளில் சட்டத்தரணி எம்.றெமிடியஸ் கருத்துரை வழங்கினார்.

# கொழும்புத்துறையில் கோஷ்டி மோதல்!

கொழும்புத்துறை

கொழும்புத்முறை பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வை மேற்கொள்வோருக்கும் அந்தப் பகுதி மக்களுக்கும் இடையே மண்அகழ்வு தொடர்பாகக் கடந்த ஒரு மாதகாலத்துக்கும் மேலாக முறுகல் நிலை தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது.

இதுவரை நான்கிற்கும் மேற்பட்டோர் இந்த முறுகல் காரணமாக வாள் வெட்டுக்கு இலக்காகி உள்ளனர்.

எனினும் இதுகுறித்து பொலிசாரோ, அதிகாரிகளோ உரிய நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை எனப் பொதுமக்கள் தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது. (110)



# உல்லாசம்

**வெ.நாகநாதன்**
**மருத்துவபீடம் இறுதிவருடம்**

வாலிப வயதில் எல்லோர்க்கும்: கண்ணிமைகள் சாமரம் வீசும். காற்றில் கற்பனைகள் சிறகடிக்கும், எண்ணங்கள் பறந்து பறந்து கானம் வாசிக்க வானம் தேடும். பூமியைப் பூப்பந்தாட தத்தித்தாவிடும் மனம்; இமயம் சென்று இறுகக் கண்மூடி உறங்க நினைக்கும். உல்லாசம் தேடி உலகெல்லாம் சிந்தனைச் சிதறல்கள் சிதறிப் பறக்கும்.

உல்லாசம் எல்லையை மீறித் தொல்லைகளை உள்வாங்கும்.

உல்லாசத்தை அதிகம் விரும்புபவர்கள், அதன் ஆளுகைக்கு உட்பட்டு, அவர்களின் ஆளுமைத் திறனில் பெரி

✷ ஆரோக்கியமின்றி இலகுவில் கூட்டுச் சேரும் இயல்பு என்பன ஏற்படும்.

பொதுவாக இவர்களில் அநேகர் எவரிடமும் அதிகமாக ஆழமான நட்பை அல்லது விசுவாசத்தைக் கொண்டிருப்பது அரிது. நண்பர்களை அடிக்கடி மாற்றிக்கொள்வதும், எந்தவித இலக்குமில்லாது அல்லது குறுகிய நோக்கில் கூட்டம் சேரும் தன்மையையும் கொண்டிருப்பர். தங்களது எண்ணங்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காக எவருடனும் நட்புக்கொள்வதாகவும், மற்றவர்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முடியாமையும் ஏற்படுகிறது.

தும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்துகின்றார்கள். இந்த மாற்றங்கள் பொதுவாக சமுதாய நலனையும், சமூகத்தின் உட்கட்டுமானத்தையும் சிதைத்து விடுகிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களின் உலகியல் வாழ்விலும் பற்றற்ற நிலையை ஏற்படுத்தி விடுகிறது. இவர்களில் இளைஞர்கள் மட்டுமல்ல, யுவதிகளும் உட்படுகின்றார்கள்.

இவர்கள் கீழ் காணும் இயல்புகளைக் கொண்டிருப்பர்:

- ✷ நிரந்தரமான நட்புப்புற நிலையில் இருந்து தவறுதல்.
- ✷ மற்றவர்களின் உணர்வுகளை உணர முடியாத நிலை.
- ✷ திறனாய்வின்றிய செயற்பாடுகள்.
- ✷ விரக்தியை சகிக்க முடியாமை.
- ✷ வன்முறைகளின் மீதான ஈர்வை
- ✷ குற்ற உணர்வின்மை
- ✷ அனுபவத்திலிருந்து கற்குமாற்றலின்மை
- ✷ உணர்வுகள் உறைந்த நிலை
- ✷ அக ஆராய்வுத்தன்மை
- ✷ உல்லாசம் தேடல்
- ✷ பற்றற்ற நிலை

மற்றும் இவர்கள் எதையும் சிந்தித்து முடிவெடுக்க முடியாமலும், விரக்திகள் ஏற்படும் போது அவற்றிலிருந்து மீள முடியாது, மேலும் மேலும் படுகுழியில் வீழ்வதாக மதுவை நாடுவதாகவும் அமையும். அத்துடன், வன்முறைகளுக்கு மது வடிகாலமைப்பதாகவும் காணப்படுகிறது. இப்படியான ஒரு விச வட்டம் தொடர ஏதுவாகவும் அமைகிறது.

பொதுவாக ஒரு தவறை மறைக்க அல்லது அதிலிருந்து மீள மேலும் மேலும் தவறுகளைச் செய்து திருப்தி காண்பதால் குற்ற உணர்வுகள் சிறிதும் அற்றதான மன நிலை ஏற்படுகிறது.

இவை மட்டுமல்லாது அனுபவங்களில் இருந்து எதனையும் கற்க முடியாது போவதுடன் உணர்வுகள் உறைந்து போகின்றன.

பொதுவாக உல்லாசத்தை மிக அதிகமாக நேசிக்கும் பெண்கள் தங்கள் மீது அதிக கவனம் செலுத்துவதாகவும், தங்களைப் பற்றி அதிகமாக மனதுள் ஆராய்வதாகவும் இருப்பதால் தமது உறவுகளைப் பற்றி எதையும் புரிய முடியாது போகின்றனர்.




மேலும் இவ்வாறான அதிகமான உல்லாசத்தை விரும்புபவர்கள் எவருடனும் ஆழமான நட்பையோ, காதலையோ அல்லது விசுவாசத்தையோ வைக்க மாட்டார்கள். அத்துடன் இவர்களால் முடியாத காரியமும் அதுவாகத்தான் இருக்கும்.

இவர்களது லௌகீக வாழ்வு அர்ப்பணிப்புகளுடன் செயற்படமுடியாது விரிசலைத் தான் அதிகம் கொண்டிருக்கும்.

# குருதிச்சோகையை நீக்கும் பீட்ரூட்



கரும்புக்கு அடுத்தபடியாக சீனி தயாரிப்புக்கு பீட்ரூட் பயன்படுத்தப் படுகின்றது. வெல் லம், மதுபானம், மருந்துகள் தயாரிக்கப் பாவிக்கப்படுகின்றது.

ஏனைய காற்கறிகளைவிட இதில் அதிகளவு சுக்ரோஸ் எனப்படும் வெல்லம் காணப்படுவதால் இதனைக் கண்டிப்பாக நீரிழிவு நோயாளிகள் உண்ணக்கூடாது. இதில் 50 சதவீதம் மாப்பொருளும் மிகுதி நீருமே காணப்படுகிறது. அத்துடன் - பொஸ்பரஸ், பொட்டாசியம், அயடீன் போன்ற கனியுப்புகளும் காணப்படுகின்றன.

இதில் காணப்படும் விற்றமின் ஏ, கல்சியம் போன்ற சத்துக்கள் காணப் படுகின்றதால் இவை சிறுநீரகத்திலுள்ள கற்களை அகற்ற உதவுகிறது.

இதிலுள்ள சிவப்புநிறம் குருதி சோகையை நீக்க கூடிய ஒரு உணவு எனச் சிலர் தவறாக நினைக்கிறார்கள். ஆனால், புற்றுநோய், மாரடைப்பு போன்ற நோய்களைத் தடுக்க பீட்ரூட் உதவுகிறது. இதில் காணப்படும் செல்கள் புற்றுநோயையும், இதய நோய்களையும் ஏற்படுத்தும். கட்டுக்கடங்காத செல்களை அகற்றுந்தன்மை கொண்டவை. எனவே, நீரிழிவு நோய் இல்லாதவர்கள் வாரத்தில் ஒரு தடவையாவது பீட்ரூட் சாப்பிட வேண்டும்.

# குழந்தைப் பருவமும் சத்துக்களும்

(சென்றவாரத்தொடர்ச்சி...)

குழந்தை பிறந்து முதல் நான்கு மாதம் வரை தாய்ப்பாலின் மூலம் குழந்தைகளுக்கு எல்லாச் சத்துக்களும் கிடைப்பதால், குழந்தை நன்றாக வளர்ந்து வருகின்றது. அதற்குப் பின்னர் அதன் தேவைகள் அதிகமாவதால் தாய்ப்பாலுடன் மற்ற உணவுகளைக் கொடுப்பதன் மூலம்தான் சரிசெய்ய முடியும். இதற்காக நாம் அன்றாடம் உண்ணும் தானியம், பருப்பு வகைகள், காய்கறிகள், பழவகைகள்,பால் போன்றவற்றை கூடியளவில் கொடுத்து வந்தால் போதுமானது.என்னிடம் வசதி மட்டும் இருந்தால் என் குழந்தை இப்படியா இருக்கும் என்று பலர் சொல்லக் கேட்டு இருக்கிறோம். வசதி என்பது என்ன? பணம் என்னும் பொருளில் பேசுகிறோம். வசதிகள் நல வாழ்வுக்கு ஒருபடி மட்டும் தான். ஆனால், வளர்ச்சிக்கு வேண்டிய வாய்ப்புக்களை அமைத்துக் கொடுப்பது சத்துக்கள் என்ற படிகளே.

**சத்துக்கள் இல்லாமையால் ஏற்படும் தீமைகள்**

1. குழந்தையின் உடல் வளர்ச்சி குன்றும்.

2.ஓடி விளையாட வேண்டிய ஆற்றல் இல்லாமையால்,குழந்தை சுறுசுறுப்பாக இருக்காது.

3. தொற்று நோய்கள் எளிதில் தொற்றிக் கொள்ளும். அடிக்கடி நோய் வருவதால் குழந்தை மேலும் பலவீனமாகிறது.

4. மூளை வளர்ச்சி குறையும்.

5. உணவுச்சத்து குறை நோய் ஏற்படும்.

உதாரணம் - இரத்த சோகை, கண் பார்வை குறைதல், மரஸ்மஸ் - குவாசியக் கோர்.

6. வயிற்றுப் போக்கு ஏற்படுவதாலும் குழந்தை வளர்ச்சி குன்றுவதுடன் மேலும் பல வீனமாகிவிடுகிறது.

**உணவுச்சத்தும் குறைநோய்களும்**

**1.குவாசியக்கோர்+ மரஸ்மஸ்**
**(Protein Energy Malnutrition)**



புரதமும், தேவையான அளவு ஆற்றலும் கிடைக்காத போது ஏற்படும் குறைநோய்கள். தானியக் கூழ் மட்டும் கொடுப்பதாலும் (அதுவும் போதிய அளவு கொடுக்கப்படாத போது), புரதச் சத்தை உடலினால் அகத்துறிஞ்ச முடியாத நிலை உருவாகும் போதும் ஏற்படுகிறது. ஏறக்குறைய 2 சதவீதமான குழந்தைகள் இந்த நோயால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

இது உடல் வளர்ச்சியை பாதிப்பதோடு, மூளை வளர்ச்சியையும் பாதித்து இரத்த சோகையையும் உண்டாக்கவல்லது.

**2. இரத்தச் சோகை (Anaemia)**

நாற்பது சதவீதத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இரத்த சோகையால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்குத் தானிய உணவு மட்டும் கொடுப்பதால் இரத்தப் பெருக்கத்துக்கு வேண்டிய இரும்புச்சத்து, மற்ற தாதுப் பொருட்கள் அடங்கிய கீரைகள், காய் கறிகள், பழங்கள் உணவில் கிடைக்காத போது இரத்தச் சோகை உண்டாகிறது. குழந்தை பசியின்மையுடனும், சுறுசுறுப்பற்றும் காண்பதுடன், எடை குறைவாகவும் இரத்தத் திலுள்ள ஹீமோகுளோபின் Haemoglobin அளவு மிகவும் குறை வாகவும் காணப்படும்.

இந்த நிலையில் குழந்தையின் அறிவுக் கூர்மையும் குறைவாகவே இருப்பதாக அறிவியல் கண்டு பிடிப்பு சொல்கிறது.

**3. கண்பார்வை குறைதல்**
**(Blindness)**

விற்றமின் ஏ சத்து குறைவால் ஏற்படும் நோயாகும். அதாவது கரட்,தக்காளி,கீரை வகைகள், பப்பாளி போன்ற உணவுப் பொருட்களை பல நாட்கள் சாப்பிடாமல் இருப்பதால் இந்த நோய் உண்டாகும். முதலில் இரவில் மட்டும் கண் சரியாகத் (மாலைக் கண்) தெரியாது. இதை சரிசெய்யாவிட்டால் காலப் போக்கில் கண்பார்வை முழுவதும் அற்றுப் போய்விடும்.அது பிறவிக் குருடு அல்ல. தாய்மார்களின் கவனக் குறைவால் தேவையான சத்துக்கள் கொடுக்க மறந்ததால் ஏற்பட்ட விபரீதமாகும்.

**வழிவகைகள்**

1. குழந்தைக்கு தேவையான உணவின் அளவைக் கொடுங்கள். அது கண்டிப்பாக தேவையான புரதத்தின் அளவையும், சக்தியின் அளவையும் கொடுக்கும்.

2. தானியமும்,பருப்பும் கலந்த உணவுகளை கண்டிப்பாக தினமும் கொடுக்க வேண்டும்.

3. ஒரு நாளைக்கு ஒரு வேளை கண்டிப்பாக கீரை, பழம், மற்றும் ஒரு வேளை பால் உணவில் சேர்க்க வேண்டும்.

4. முட்டையும், இறைச்சியும் வாரம் ஒரு முறையாவது உண்ணக் கொடுக்க வேண் டும்.

5. சுத்தமான முறையில் உணவுப் பண்டங்களை சமைத்து கொடுக்க வேண்டும்.

6. சுத்தமான சுட்டாறிய நீரையே கொடுத்து வருதல் வேண்டும்.

7. குழந்தைகளுக்கு நல்ல நலவாழ்வுப் பழக்க வழக்கங்களைச் சிறுவயது முதலே கற்றுக் கொடுக்க வேண்டும்.

8. நோய்த்தடுப்பு ஊசியைப் போட்டு, நோய் வராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

9. நோய் கண்டவுடன் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை பெறுதல் வேண்டும்.

நாம் குழந்தைகளை இந்த நோய்கள் மட்டுமல்லாமல் எந்த நோயும் வராமல் வளர்க்க முடியும் என்ற நம்பிக்கையைத் தாய்மார்கள் வளர்த்துக் கொண்டு, குழந்தைகள் வளர்ச்சியில் அக்கறை கொள்ள வேண்டும்.

நி.தர்ஷனோதயன்.
4 ஆம் வருடம் சித்த மருத்துவத்துறை.
யாழ்.பல்கலைக்கழகம்.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் 2006

## தமிழ் - I

### பகுதி I

(01) பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
அ) அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் பொருட் சிறப்பை விளக்குக.

1. "கொங்குநேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே"

(02)

(1) அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த விலர்

(2) பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

(3) நகையுள்ள மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு

(4) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

(03) அ) கூறிய முனிவனைக் குளிர்ந்த தாமரை
சீறிய கைகளாற் றொழுது செங்கணா
னாறிய சிந்தனை யறிஐ வொன்றுரை
கூறுவ துளதென கூறன் மேயினான்

ஆ) சான்றது ராகதன் குரவ ராகதாய்
போன்றவ ராகபொற் புதல்வ ராகதான்
றேன்றரு மலருளான் சிறுவ செய்வெனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ

(04) உற்றமே லவன்றன் னருளினாற் கஃபா
வுதிந்தரு ளித்தலந் தனிலே
குற்றமற் றுயருங் குறைசியங் குலத்தின்
கொழுந்ததாய் வேதகா ரணராய்
வெற்றியும் விருது மிகப்பெறு பவராய்
விண்ணவர் புகழ்மணி விளக்காய்
நற்றவ நபிக ளெவர்க்குநா யகமாய்
வருவரோர் நபிநவ மோங்க (24 புள்ளிகள்)

'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) உதிர்ந்தமலர்

(1) முள்ளுடைச் சிறுசெடியின் - கனவாய்
மூண்டு சிரித்த மலர்
கள்ளெனும் பொக்கிஷத்தால் - விம்மியே
கர்வம் அடைந்த மலர்

(2) பனித்துளி மணிசூடித் - தென்றலின்
பாட்டினைக் கேட்ட மலர்
கனிந்துள விண்ணதன்கீழ் - மௌனக்
கல்வியைக் கற்ற மலர்

(3) அந்திச் சிவப்பினையும் - விண்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்ட மலர் - மணமே
செய்து திளைத்த மலர்

(4) வீழ்ந்து கிடக்குதையே - உச்சி
வெய்யிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை - மண்ணிலே
வரைந்துளதோ வண்டே.

(1) மலர் கர்வம் கொள்ளக் காரணம் யாது?
(2) இப்பாடல் புலப்படுத்தும் உணர்வினை விளக்குக.
(3) பாடலின் பொருளை ஆழமாகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்துவதற்குக் கவிஞர் கையாண்ட உத்தி யாது? தெளிவுபடுத்துக.
(4) இப்பாடலின் நோக்கம் பற்றிய கவிஞரின் கருத்தை விளக்குக. (14 புள்ளிகள்)

ஆ) செல்லையா நாணயக் கயிற்றை இளக்கிவிட்டு மாட்டின் கால்களுக்கிடையில் தன் காலை வைத்தான். ரோசம் மிகுந்த அந்த இளங்காளை உன் மத்தம் கொண்டதுபோல் ஏற்காலைத் தன் ஏரியில் பட்டும் படாமலும் தாங்கிக் கொண்டு பறந்தது...
ஆத்திரத்தில் சிந்தனை இல்லாமற் கூறிய வார்த்தைக்கு இவ்வளவு கோபமோ? நிலத்தில் வியர்வை சொட்டக் கைகால் வலியினால் செயலற்றுப் போக புகையிலைத் தோட்டத்தைக் கிண்டிப் பாடுபட்டவனுக்குத்தான் காசினருமை தெரியும். அவன் ஆண்பிள்ளை. இரண்டு வார்த்தைபேச உரிமையுண்டு. அதைப் பெண் பொறுத்துக் கொண்டால் என்ன?

1) இளங்காளை வேகங்கொண்டு ஓடியதன் காரணம் யாது?
2) செல்லையாவின் மனநிலை பற்றி விளக்குக.
3) செல்லையாவின் உழைப்பின் உயர்வை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்?
4) இவ்வுரைப் பகுதியில் வெளிப்படும் ஆசிரியரின் நடைச்சிறப்பினை விளக்குக.

03) நல்குரவு என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

1) நல்குரவு பற்றிய வரைவிலக்கணம்
2) கொடுமை தரும் நல்குரவின் இயல்புகள்
3) நல்குரவின் வழி ஏற்படும் துன்பங்கள்
4) நலகுரவால் பீடிக்கப்படுமிடத்துச் செய்யத்தக்கது. (15 புள்ளிகள்)

04) பரதனது சேனைக்குப் பரத்துவாச முனிவர் விருந்து அளித்தது முதல் பரதனது சேனையைக் கண்டு இலக்குவணன் சீற்றமடைவது வரையுள்ள பகுதியில்

1) தேவலோக மாதரின் விருந்தோம்பற் பண்பு
2) பரதனது பெருமை
3) இலக்குவணனது சீற்றம்
4) கம்பரின் கவிச்சிறப்பு புலப்படுமாற்றைத் துலக்குக.

(15 புள்ளிகள்)

05) இரட்சணிய யாத்திரிகத்தில்
1) யூதர்களின் இழிந்த உளப்பாங்கு
2) இயேசுநாதர் அடைந்த உடற்துன்பம்
3) இயேசுநாதர் மக்கள் மேல் கொண்ட நேயம்
4) கவிஞர் கையாண்ட உவமையணிச் சிறப்பு புலப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள்)

06) எம்.எம்.ஏ அஸீஸ் எழுதியுள்ள "கலையும் காட்சியும்" என்ற கட்டுரையில் -
1) கட்டுரையாசிரியர் காங்கிரஸ் கூட்டத்திற் கற்றுக் கொண்ட பாடம்.
2) வேற்றுமொழிப் பெயர்ச் சொற்களைத் தமிழில் எழுதும் முறை.
3) மொழி பெயர்ப்புக் கலையின் அவசியம்.
4) கட்டுரையாசிரியரின் மொழிநடைச் சிறப்பு ஆகியவற்றை விளக்குக.
(15 புள்ளிகள்)

07) பாற்கஞ்சி, ஒருநாள் கழிந்தது என்ற சிறுகதைகளை ஆதாரமாகக் கொண்டு
1) இரு கதைக்களுக்கூடாகவும் வெளிப்படும் வறுமைப்பதிவுகளை ஒப்பிட்டு விளக்குக.
2) அழமு, ராமு பாத்திரங்களின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.
3) பாற்கஞ்சி சிறுகதையில் கதாசிரியரின் கதைசொல்லும் பாணி பற்றிக் கருத்துரை வழங்குக.
(15 புள்ளிகள்)

08) பாரதியாரின் "புதுமைப்பெண்" என்ற கவிதையில்
1) "பெண்களுக்கும் சுதந்திரம் உண்டு என்பதற்குப் புதுமைப்பெண் நிலை நிறுத்திய ஆதாரங்கள்.
2) அடிமைப் பெண்ணின் இயல்புகள்.
3) கவிஞர் புதுமைப் பெண்ணைப் போற்றியதன் காரணம்.
4) கவிஞரின் கவிச்சிறப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினைத் துலக்குக.
(15 புள்ளிகள்)

09) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றை விளக்குக.
1) நனியிரு முந்நீரேணியாக... என்று தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளிற் கூறப்படும் அரசர்க்கான அறிவுரைகள்.
2) 'நீ யார்' என்ற கவிதையில் புலப்படும் மனித உறவுகளின் மனப்பாங்குகள்.
3) குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லி பந்தடிக்கும் திறன் சித்திரிக்கப்படுவது.
4) நாச்சியார் பாடலில் வெளிப்படும் தெய்வீகக் காதற்சிறப்பு
5) காட்டின் வெம்மையை உணர்த்தக் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் கையாண்ட தற்குறிப்பேற்ற அணிகள். (15 புள்ளிகள்)

### பகுதி I

கீழ் வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350 - 400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ. தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணிகள்
ஆ. தமிழ்மொழி வளர்ச்சியில் நவீன தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு
இ. இன்றைய நிலையில் பன்மொழி அறிவின் அவசியம்
ஈ. மக்கள் வாழ்வியலில் சமாதானத்தின் முக்கியத்துவம்.
உ. விஞ்ஞானத்தால் ஏற்பட்ட பயன்களும் பாதிப்புகளும்
ஊ. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

(20 புள்ளிகள்)

02) பின்வரும் "அ" உரைப்பகுதியையும் "ஆ" செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அ. பலவகை ஒலிகளுக்கும் பிறப்பிடமாகிய உடலின் உறுப்புக்கள் எல்லா மக்களுக்கும் ஒரே தன்மையாக அமைந்துள்ளன. எனினும் ஒரு மொழியைப் பேசும் மக்கள் மற்றொரு மொழியின் ஒலிகளை அவ்வளவு நன்றாக ஒலிக்க இயலாமல் இடர்ப்படுகின்றனர். காரணம் என்ன? உடலின் உறுப்புக்கள் ஒரே தன்மையாக இருப்பினும் சிலவகை ஒலிகளை ஒலித்துப் பழகிவிட்ட பிறகு அவை பயிற்சி மிகுதியால் அந்த ஒலிகளுக்கு ஏற்றாற்போல் அமைந்துவிடுகின்றன. இடமிருந்து வலம் நோக்கி எழுதிப் பழகிய கை வலமிருந்து இடம்நோக்கி எழுத முனைந்தால் இடர்ப்படுகின்றது அன்றோ? அதுபோலவே ஒலிக்கும் உறுப்புக்களும் பயிலாத ஒலிகளை ஒலிக்கும் போது இடர்ப்படுகின்றன.

1) இந்தப் பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை 30 சொற்களுள் சுருக்கி எழுதுக.
2) நாம் பயிலாத ஒலிகளை ஒலிக்கும் போது இடர்ப்படுவதன் காரணம் யாது?

ஆ. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

1) இந்தச் செய்யுள் கூறும் கருத்தை உமது நடையில் 30 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.
2) இங்கு ஆசிரியர் உ ணர்த்தும் பிரதான கருப்பொருள் யாது?
3) இந்தச் செய்யுளுக்குச் சுவைநல்கும் அணியை எடுத்துக்காட்டி விளக்குக.
(15 புள்ளிகள்)

03) மேல்வரும் பதினைந்து வினாக்களுக்கும் (அ), (ஆ), (இ) என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கும் மட்டும் விடை எழுதுக.

(அ)
1) ஐப்பசி - இச்சொல் லில் வரும் எழுத்துக்களில் மாத்திரை அளவினைக் குறிப்பிடுக.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் 2006

2) கோடு, பங்கு, பசு, உரல், நாடு, உயிர் இவற்றுள் முற்றியலுகரம் இடம்பெறும் சொற்களை எழுதுக.
3) தைஇத் திங்கட் டண்கயம் போல - இதனை சந்தி பிரித்து எழுதுக.
4) பூமி, கல், காலை, நன்மை, வேனில், மரம் - இவற்றுள் பொருட்பெயரையும், காலப் பெயரையும் குறிப்பிடுக.
5) 'பாய்ந்தவன் விழுந்தான், விழுந்தவன் நிமிர்ந்தான்' என்பதில் விழுந்தவன் விழுந்தான் என்னும் இரு சொற்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?

(ஆ)
6) இயக்குநர் - இதனைப் பகுத்துக்காட்டுக.
7) இரு என்னும் வினையடி முதல் வினையாகவும், துணைவினையாகவும் அமைய இரண்டு வாக்கியங்கள் எழுதுக.
8) அரிதட்டு, கவிநயம், குரங்குமனம், பூம்பொழில் இவை ஒவ்வொன்றும் என்ன தொகை எனக் குறிப்பிடுக.
9) இரவுபகல், கொடுத்துவாழ்ந்தான், உண்டு களித்தான், போக்குவரவு இவற்றுள் இரண்டு தொழிற்பெயர்கள் சேர்ந்து ஒரு தொழிற் பெயராக அமையும் சொல் எது?
10) 'வீரத்தில் சிறந்தவன் வீமன்' இவ் வாக்கியத்தில் இடம் பெற்ற வேற்றுமை உருபு எது? அது எப்பொருளில் வந்துள்ளது.

(இ)
11) 'அறம் செய விரும்பு' என்பது ஔவை வாக்கு. இங்கு இடம் பெற்ற தலைமைத் தொடரை எழுதுக.
12) அலகு, அளகு ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.
13) நேற்றுத்தான் சுடர்நிலாவின் வீட்டிற்குச் சென்றேன். - இங்கு தான் என்ற இடைச் சொல் என்ன பொருளில் வந்துள்ளது.
14) கரிய மாடு, அவன் நல்லவன், உண்ட பையன், அவன் கரியன் - இங்கு குறிப்பு வினைப் பெயரெச்சமாக அமைந்த சொல் எது?
15) 'ஒவ்வொரு மான்களும் அழகானவை' இந்த வாக்கியத்தில் இடம் பெற்ற வழுவைச் சுட்டிக்காட்டி திருத்தி எழுதுக.

(20 புள்ளிகள்)

## பகுதி II

04) அ. சங்கமருவிய கால அறஇலக்கியப் பண்புகள் யாவை.
ஆ. சங்கமருவிய இலக்கியங்கள் முற்கால இலக்கியங்களினின்றும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்குக.

(15 புள்ளிகள்)

5) அ. பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள் அதிகளவு தோன்றியமைக்கான காரணிகள் யாவை?
ஆ. பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரை தோன்றிய சமய இலக்கியங்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்க.

(15 புள்ளிகள்)

06) அ. தமிழ் வளர்ச்சியில் ஐரோப்பியரின் பங்களிப்புப் பற்றி மதிப்பிடுக.
ஆ. ஆரம்பகால நாவல்களின் முக்கிய பண்புகளை எடுத்துக் காட்டுக.

(15 புள்ளிகள்)

## பகுதி III

07) அ. யாழ்ப்பாணத்தரசர் காலத்தெழுந்த இலக்கியங்களைக் குறிப்பிடுக.
ஆ. ஈழத்தில் 18 ஆம் நூற்றாண்டு வரை எழுந்த சிற்றிலக்கியங்களின் முக்கிய பண்புகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

08) அ. இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்க் கவிதையின் சிறப்பியல்புகளை சுருக்கமாக விவரிக்க.
ஆ. கவிதை வளர்ச்சிக்கு மஹாகவி உருத்திரமூர்த்தி ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

09) மேல்வருவோருள் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
அ. பேராசிரியர் ம.மு.உவைஸ்
ஆ. சி.வி.வேலுப்பிள்ளை
இ. வ.அ.இராசரத்தினம்
ஈ. அரசகேசரி
உ. பேராசிரியர் வி.சிவஞானசுந்தரம் (நந்தி)

(15 புள்ளிகள்)

செல்வி.க.சந்திரகுமாரி.
B.A (Hons) Dip-in-Ed
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் 200

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I

### மாதிரி வினாத்தாள்

### பகுதி "அ"

✤ பின்வரும் கூற்றுக்கள் சரியா(சரி) பிழையா (பிழை) என்பதை அடைப்புக்குறியினுள் குறியிட்டுக் காட்டுக.

1. நான்கு வகை அபிநயங்களும் ஒரு நாடகத்தில் காணப்படும் (.........)
2. பரதர் நவரசங்களை நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடுகின்றார் (.........)
3. மெனாண்டர் தலைசிறந்த திறஜடி நாடகாசிரியர் (.........)
4. "கதாசிஸ்" என்பது உணர்ச்சிகளின் வெளிப்பாடுகை (.........)

✤ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.

5. கிரேக்க திறஜடி நாயகன் எப்பொழுதும்
i) தனது இலக்கை ஈட்டுபவன்
ii) பரிகாசத்திற்குரிய ஒருவன்
iii) விதியிலிருந்து தப்ப முடியாதவன்
iv) உடனுக்குடன் எதிர்மொழி கூறுபவன் (.........)

6. நாடகம் என்பது ஒரு
i) வாழும் கலை
ii) கூட்டுக்கலை
iii) நிகழ்கலை
iv) வெளிக்கலை எனக் கூற முடியாது (.........)

7. "ஸ்திரிபாட்" வேடத்தில் புகழ்பெற்ற ஈழத்துக் கலைஞர்
i) நடிகமணி V.V வைரமுத்து
ii) M.V கிருஷ்ண ஆழ்வார்
iii) பொன்னாலை கிருஷ்ணன்
iv) அவ்வை சண்முகம் (.........)

8. பின்வருவனவற்றில் மாறுபட்ட மோடியைக் கொண்டது
i) ஒப்பேரா
ii) இசைநடனம்
iii) நூர்த்தி (Nurti)
iv) பலே (.........)

9. கிரேக்க அவல நாயகனுக்கும் வடமொழி நாயகனுக்கும் முறையே பின்வரும் எத் தொடர்பு பொருத்தமானது.
i) மகிழ்நெறி, அவலம்
ii) அவலம், மகிழ்நெறி
iii) சற்றயர், மகிழ்நெறி
iv) அவலம், அவலம் (.........)

10. சீன அரங்கின் இசைநாடக வடிவமாகக் குறிப்பிடப்படுவது
i) கபுக்கி
ii) நொஹ் (NOH)
iii) புன்றக்
iv) நூர்த்தி (Nurti) (.........)

11. நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படாத ஒன்பதாவது ரஸம் எது?
i) சாந்தம்
ii) வீர
iii) சிங்காரம்
iv) கருணா (.........)

12. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள வேத்தியல் என்பது
I) அடிநிலை மக்கள் ஆடுவதைக் குறிப்பது
II) அரசவையில் ஆடப்படுவதைக் குறிப்பது
III) சடங்கு நாடகங்களைக் குறிப்பது
IV) நடன மாதர் ஆடும் காமக்குறிப்பு ஆட்டங்களைக் குறிப்பது. (.........)

✤ கீழ்க்காணும் விடைகளுள்ளே பொருத்தமற்றதைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

13. நாடகம் என்பது இன்றுள்ள நிலையில்
I) கட்புலக் கலைவடிவமாகவும் அமையும்
II) கட்புல, செவிப்புலக் கலைவடிவமாகவும் அமையும்
III) செவிப்புல கலைவடிவமாகவும் அமையும்
IV) வெளிக்கலையாகவும் அமையும் (.........)

14. கிரேக்க திறஜெடி நாடகத்தின் கதாநாயகன்
I) விதி, சாபம் என்பவற்றால் துரத்தப்படுபவனாக அமைவான்
II) எல்லாச் சோதனைகளையும் வென்று இறுதியில் வெற்றி அடைவான்
III) குடும்பத்தின் மீதுள்ள ஒரு சாபத்துக்கு பலியாகின்றவனாக அமைவான்
IV) உயர் நிலையிலுள்ள பாத்திரம் இறுதியில் நலிவடையும் (.........)

15. நெறியாளரின் முக்கிய பணிகளில் ஒன்று
I) நடிகரைத் தெரிவு செய்தல்
II) கலைஞர்களை ஒன்றிணைத்தல்
III) வகிபாகமாக மாறுதல்
IV) நாடகப் பாடத்தை தெரிவுசெய்தல் (.........)

✤ கீறிட்ட இடங்களை நிரப்புதல்

16. ஒற்றைக்கால் நாடகம்.............................. எனவும் அழைக்கப்படுகின்றது.

17. ஷேக்ஸ்பியர் எழுதிய மகிழ்நெறி நாடகங்கள் இரண்டின் பெயர் எழுதுக?
I)........................................ II)..............................................

18. கிரேக்க அரங்கில் காணப்படும் மூன்று நாடக வகைகளும் எவை?
I) ..............................................................
II) ..............................................................
III) ..............................................................

19. பகல் வேளையில் அளிக்கை செய்யப்பட்ட இரு அரங்குகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
I) ..............................................................
II) ..............................................................

20. வேடமுகம் (Mask) அணியும்........................ அரங்கு மிகத் தொன்மையானது.

### பகுதி "ஆ"

1) நாட்டிய சாஸ்திரம் கூறும் எண் வகை ரசத்துடன் இணைந்த நவரசங்களும் ஒரு நாடக அளிக்கையில் எவ்வாறு தோற்றம் பெறுகின்றது என்பதை உதாரணங்களுடன் தருக?
2) எலிசபெத் கால உள்ளக அரங்கொன்றின் செயற்பாட்டை ஆராய்க?
3) வடமோடி வடிவமானது தென்மோடி வடிவத்திலிருந்து வேறுபடும் முறைமையை விளக்குக?
4) நிருத்த நிருத்திய நாட்டிய வரைவிலக்கணங்களைக் கூறி அவற்றின் பொதுவான அம்சங்களை விளக்குக.
5) உமக்குத் தெரிந்த கிரேக்க திறஜெடி நாடகமொன்றில் மூன்றின் ஒருமைநிலை (நாடகமும்மை) காணப்படும் முறையை விளக்குக.
6) "கவிதையியல்" நூலில் கூறப்பட்டுள்ள ஆறு அம்சங்களையும் குறிப்பிடுக? அவை கிரேக்க திறஜெடியில் காணப்படும் இடத்தையும் விளக்குக?
7) ஒரு நாடக ஆற்றுகையின் வெற்றிக்கு செயல்முனைப்புள்ள பார்ப்போர் பங்குகொள்ளல் அவசியமாகும். இந்தக் கூற்றை ஆராய்க?
8) பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிக் குறிப்புகள் எழுதுக?
1. கபுக்கி 2. தெருவெளி அரங்கு 3. பாவம் "Bhavam" 4. கதாசிஸ்
5. பம்மல் சம்பந்த முதலியார் 6. மெனாண்டர் 7.பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை
8. பார்ஸி மரபு

திரு.கனகரத்தினம் கனகேஸ்வரன்

# இந்தியாவின் சீற்றத்தை அதிகரிக்கும் இலங்கை - சீன - பாகிஸ்தான் கூட்டணி!

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயம் தொடர்பாக புலிகளின் குரல் வானொலியில் அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆற்றிய உரையின் தொகுப்பு.......**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினுடைய பாகிஸ்தானிய பயணத்தையொட்டி இலங்கையின் வெளியுறவுக் கொள்கைப் போக்கை நாம் சற்று ஆராய வேண்டியது அவசியமாகும்.

இலங்கை - இப்போது மிகவும் ஊசலாடுகின்ற ஒரு நிலையற்ற வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருக்கிறது. ஆனால், புவிசார் அரசியல் அடிப்படையில் இலங்கை என்று தவிர்க்க முடியாத ஒரு வெளியுறவுக் கொள்கை நிர்ணயம் நிகழ முடியும். இந்த அடிப்படையில் தான் இப்போது இந்த விவகாரத்தை நாம் நோக்க வேண்டியிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதும் தனது முதலாவது பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டார். அப்பொழுது அவர் இந்தியாவை தன் பக்கம் வளைத்தெடுக்கின்ற முயற்சியைப் பெரிதும் கைக் கொள்ள முற்பட்டார். ஆனாலும்கூட அவர் எதிர்பார்த்த அளவுக்கு அந்த முயற்சி அவருக்கு கைகூடத் தவறியது. இதன் பின்பு அவருக்கு இருக்கக்கூடிய வேறு தெரிவுகளின்பால் அவர் தன் நாட்டங்களை செலுத்தத் தொடங்கினார்.

இந்த வகையில் அவரது முதலாவது கொள்கை வகுப்பானது ஒரு தெளிவான தீர்க்க தரிசனம் மிகுந்த பார்வையின் அடிப்படையில் நிகழத்தவறியது என்பதையே நாம் காண முடிகிறது.

இப்போது அவருடைய இன்னொரு வாய்ப்பான ஒரு தெரிவு பற்றி அவர் சிந்திக்கின்றார் போல தெரிகிறது.

அதாவது - அவர் பாகிஸ்தானுக்கு சென்றதும் பாகிஸ்தானால் உலகப் பெருவல்லரசான அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பை விடவும், ஒரு மிகவும் குட்டித் தீவான இலங்கையின் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு பெரியதாக இருப்பதை அரசியல் விமசகர்களும், இராஜதந்திரிகளும் இப்பொழுது சுட்டிக் காட்டுகின்றனர். இதற்கு இன்று ஒரு தெளிவான, திட்டவட்டமான பின்னணி இருக்கவே செய்கிறது.

இப்படி இலங்கையைப் பாகிஸ்தான் வளைக்க விரும்புவது இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் சீற்றத்தை அதிகரிக்க உதவுமே தவிர, இலங்கை அரசுக்கு அது பெருவெற்றியைக் கொடுக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. ஆனால், நாம் இதில் ஒரு விடயத்தை அடிப்படையாக நோக்க வேண்டியுள்ளது.

சிங்கள அரசானது - இலங்கைக்குள் தமிழ் மக்களுடன் தன்னுடைய பிரச்சினையைத் தீர்க்கத் தயாரில்லை என்பதனைத் தான் அதனுடைய இன்றைய பாகிஸ்தானிய பயணத்தின்போதான நகர்வுகள் எமக்கு தெளிவாகக் காட்டுகின்றன.

முதலாவதாகப் பாகிஸ்தானிய அரசுடன் இலங்கை அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற கோதாவில் ஒரு உடன் பாட்டுக்கு வந்திருக்கிறது. அப்படியென்றால், நிச்சயமாக இலங்கை எல்லைகளுக்குள் அல்லது இலங்கையின் எல்லைக்கு வெளியே இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசு நாடுகின்றது என்பதனை அது தெளிவாகக் காட்டுகின்றது.

எனவே, இலங்கைத்தீவுக்கு வெளியேதான் இலங்கை அரச தீர்வைத் தேடுகின்றது என்பதிலிருந்து அது இனப்பிரச்சினைக்கு உள்நாட்டில் அதாவது தமிழ் மக்களுடன் சேர்ந்து, தமிழ் மக்களுடன் பேசி அந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தயாரில்லை என்பதைக் காட்டுகின்றது.

தமிழ் மக்களின் தனிப்பெரும் சக்தியாக இருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அது உலக சக்திகளுடன் இணைந்து இந்தப் பிரச்சினையை ஒடுக்க வேண்டும் என்பதிலேயே இலங்கை அரசு அக்கறை செலுத்துகின்றது என்பது இப்போது தெளிவாக இருக்கிறது. இவற்றை நாம் அரசியல் ரீதியாக கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

அதாவது, அரசியல் ரீதியான தீர்வுக்குப் பதிலாக இராணுவ ரீதியான கண்ணோட்டத்தில் தான் பாகிஸ்தானுடனான அதனுடைய உறவாடல்கள் அமைந்திருக்கின்றன. பயங்கரவாத எதிர்ப்பு என்ற அதனுடைய கண்ணோட்டமானது- இராணுவ ரீதியான உதவியைப் பாகிஸ்தானிடமிருந்து பெறுவதையே மையமாகக் கொண்டது.

இது விடயத்தில் ஒரு விடயத்தை நாம் தெளிவாக அடையாளம் காண வேண்டும். பாகிஸ்தானது - இலங்கை விவகாரத்தை மையமாகக் கொண்டு இந்தியாவுடன் மோதத் தயாரில்லை. இது ஒரு போதும் நிகழப் போவதில்லை. ஆனால், இதில் ஒரு வித்தியாசமான பிரச்சினை இருக்கின்றது.

இலங்கை விவகாரத்தில் பாகிஸ்தான் ஆயுத உதவிகளை வழங்குவதனையோ அல்லது நிபுணத்துவ உதவிகளை வழங்குவதனையோ இந்தியா பொறுத்துக் கொள்ளும். சில வேளைகளில் ஆயுத உதவிகளைக்கூட இந்தியா விரும்பவும் கூடும். ஆனால், அதற்கு மேல் இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகள் நீளுமாயின் இந்தியாவினால் அதனை சகிக்கவோ, பொறுக்கவோ நிச்சயம் முடியாது. இது பாகிஸ்தானுக்கும் நிச்சயம் தெரியும். எனவே, இந்த வட்டத்தில் நின்று பார்க்கும் போது பாகிஸ்தானுடனான உறவு ஒரு மட்டத்துக்கு உட்பட்டது என்பதை பாகிஸ்தான் தெளிவாகவே தெரிந்து வைத்திருக்கிறது. 2500 ஆண்டுகால அரசியல் இராஜதந்திர பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கை அரசானது - இதனைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்று நாம் கூறமுடியாது.



ஆனால், ராஜபக்ஷவுக்கு இருக்கக்கூடிய இன்றைய தெரிவுகளில் இதுதான் அவருக்கு கைக்கெட்டியதாகக் காணப்படுகின்றது. அப்படியெனில், ஒரு வகையில் அது ஒரு கையறு நிலை என்றே கூறவேண்டும். ஏனெனில், இது ஒரு ஆபத்தான தெரிவு என்று தெரிந்தும்கூட அதனைத்தான் அவர் தெரிவு செய்ய வேண்டும் எனில் அது நிச்சயமாக ஒரு கையறு நிலைதான்.

இதிலுள்ள இரண்டாவது பரிமாணத்தைப் பார்ப்போம்.

பாகிஸ்தான் தனித்து இந்தியாவுடன் மோதுவதற்குத் தயாராக இருக்க முடியாது. அப்படியெனில் இரண்டாவது தெரிவில் ஒரு விநோதமான பின்னணி இருக்க முடியும். எப்படியெனில் கொழும்பு இஸ்லாமபாத், பீஜிங் என்கின்ற ஒரு அச்சின் கீழ் ஒரு நல்லுறவு உருவாகி, இனப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கான ஒரு சிந்தனைப் போக்கு தோன்றுவதற்கு நிச்சயம் வாய்ப்பு இருக்கவே செய்கின்றது.

இதில் நாம் ஒரு பின்னணியை நோக்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் ஐக்கிய தேசியக் கட்சியாயினும் சரி, சுதந்திரக் கட்சியாயினும் சரி, ஜே.வி.பி ஆயினும் சரி எது பதவிக்கு வரினும் அதற்கு ஒரே மாதிரியாகவே அது அமையும்.

எனவே, இலங்கை விவகாரத்தில் எந்தச் சிங்கள ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்தாலும், பாகிஸ்தானின் தெரிவு ஒன்றுதான். அது அரசின் பக்கம் என்பதுதான். எனவே, அது அரசாங்கத்தைப் பற்றி பொருட்படுத்த வேண்டியதில்லை. எந்த அரசாங்கங்கள் மாறினாலும், பாகிஸ்தான் - சிங்கள அரசின் பக்கம் என்பதில் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கின்றது. ஆனால், சீனாவைப் பொறுத்த வரையில் இதில் வித்தியாசங்கள் உண்டு.

சீனாவின் முதலாவது தெரிவு ஜே.வி.பியினர் தான். அதாவது - அவர்கள் இலங்கை அரசுக்கு ஆதரவாளர்கள். அதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர்கள் முதலாவது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருக்கும்போது ஆதரவாக இருந்தாலும் கூட, அவர்களுடைய முதலாவது தெரிவு ஐக்கிய தேசியக் கட்சியாக இருக்காது. சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருக்கும் போது அவர்கள் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளித்தாலும், அவர்களுடைய ஆதரவு இரண்டாவது தெரிவாகவே சுதந்திரக்கட்சிக்கு இருக்கும். சுதந்திரக் கட்சிக்கு அப்பால் ஜே.வி.பி பதவியேற்பதனை அவர்கள் விரும்புவார்கள். எனவே, அவர்களுடைய முதலாவது தெரிவு ஜே.வி.பி யினர்தான். ஆனால், இங்கேதான் பிரச்சனையுள்ளது. அவர்கள் சிங்கள அரசுக்கு ஆதரவானவர்கள். அதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால், இந்த மூன்று கட்சிகளில் மூன்றாவதான ஜே.வி.பிக்குத்தான் ஆதரவாளர்கள். ஆனால், ஜே.வி.பி பதவிக்கு வரமுடியாத நிலைக்கு இப்போது தள்ளப்பட்டுள்ளது அல்லது ஆட்சி அதிகாரத்தில் சவாலிட முடியாத அளவுக்கு கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பின்தள்ளப்பட்டிருக்கின்றது என்ற பின்னணியில் இப்போது பீஜீங்கிற்கு இருக்கக் கூடிய ஒரேயொரு தெரிவு மகிந்த ராஜபக்ஷதான். ஆகையால் மகிந்தராஜ பக்ஷவை நூறு வீதம் பலப்படுத்துவதைத் தவிர பீஜிங்கிற்கு மாற்றுத்தீர்வு எதுவுமேயில்லை.

எனவே, இலங்கை விவகாரத்தில் பீஜிங்கும், இஸ்லாமபாத்தும் ராஜபக்ஷவுக்கு ஆதரிப்பதில் எந்த விதமான கிலேசமும் அற்ற ஒரேவிதமான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு சூழல் காணப்படுகிறது.

இது மிகவும் ஆபத்தான ஒன்று. ஒருவகையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு சாதகமானது. எவ்வாறெனில், ஜே.வி.பிக்கு பீஜிங் ஆதரவளித்து விடுமோ அல்லது மகிந்த ராஜபக்ஷவை வெட்டி, அது முன்னணிக்கு கொண்டு வந்து விடுமோ என்ற அச்சம் மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கவே செய்தது. இப்போது மகிந்த ராஜபக்ஷவிடம் நிச்சயமாக இருக்கமாட்டாது.

ஆனபடியால், இனி பீஜிங்கினுடைய ஆதரவு, இஸ்லாமபாத்தினுடைய ஆதரவு நிச்சயமாக கொழும்பில் இருக்கும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு நூறு வீதமானதாகவே இருக்கும். அப்படியாயின் பீஜிங், இஸ்லாமபாத், கொழும்பு என்ற ஒரு முக்கூட்டு அச்சு என்பது இப்போது நூறு வீதம் ஸ்தாபிதமடைந்துவிட்டது.

இந்த நிலையில் இந்த முக்கூட்டு அச்சுக்கு எதிராக இந்தியாவின் அணுகுமுறை என்பது எதிர்வினையாக அமையப் போகிறது. இதில் இந்தியாவும் தனக்குகென ஒரு அச்சை அமைக்கும். ஆனால், இதில் ஒரு விடயம் மிகவும் தெளிவானது. இலங்கையைத் தனது செல்வாக்கு மண்டலத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற விருப்பம் இந்தியாவுக்கு எப்போதும் உண்டு.

ஆனபடியால் இலங்கை விவகாரத்தில் இந்தியா கடந்தகாலம் முழுவதும் ஏறக்குறைய ஒரே மாதிரியான கொள்கையைப் பின்பற்றி வந்திருக்கின்றது. அது எப்படியெனில் இலங்கை அரசாங்கத்தை அணைத்து நடத்துவதன் மூலம் சிங்கள ஆட்சியாளர்கள் எவர் பதவிக்கு வரினும், அதனை அணைத்து நடத்துவதன் மூலம், இலங்கைத் தீவை செல்வாக்கு மண்டலத்துக்குள் வைத்திருக்கவே இந்தியா விரும்புகிறது. இப்போதும் அதனையே விரும்புகிறது. ஆனால், இந்தியாவுக்கு எதிரான அணியோடு இலங்கையின் அச்சு அமையுமேயானால் அந்த செல்வாக்கு மண்டல கொள்கையில் இந்தியா மாற்றம் செய்ய வேண்டியிருக்கும். ஒருவகையில் 1977ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இந்தியாவினுடைய வெளியுறவுக் கொள்கைக்கு முரணான ஒரு நிலையெடுத்த போதுதான் இந்தியா தனது புஜபல பராக்கிரமத்தைக் காட்டி, ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசுக்கு அச்சமூட்டி ஒரு ஒப்பந்தத்துக்கு பணியவைத்த போதிலும் இறுதியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினுடைய வழிக்கு இந்தியா துணைபோவதாகவே அது மாறிச் சென்றது.

எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, இந்தியாவினுடைய கடந்தகால அணுகுமுறை என்பது எப்போதுமே இலங்கையை அணைத்துப் போவது என்ற ஒரு கொள்கை கொண்டதாகவே இருக்கிறது.

ஆனால், இப்போது மகிந்த ராஜபக்ஷவினுடைய கொள்கை, இலங்கையை அணைத்துச் செல்ல முடியுமா என்ற கேள்வியை இந்திய கொள்கை வகுப்பாளர்களின் மனங்களில் எற்படுத்த வல்லதாய் மாறியுள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாக இலங்கையின் கள அரசியலில் ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளதை நாம் இந்த வாரத்திலிருந்து அடையாளம் காண வேண்டியிருக்கிறது.

எனவே, இது இப்போது எமக்கு ஒரு புதிய தளமும் ஆகும். ஆனபடியால் எமக்கு இப்போது சற்று வித்தியாசமான ஆனால் விறு விறுப்பான அணுகுமுறைகள் மிகவும் அவசியப்படுகின்ற ஒரு காலகட்டத்துக்குள் நாம் நுழைந்துவிட்டோம் என்றே கூற வேண்டியிருக்கின்றது.

இறுதி அர்த்தத்தில் அரசியல் ஒரு பொதுப்போக்கின் முடிவுக்குத்தான் உட்படுமேயாயினும், அவ்வப்போது அரசியல் நடவடிக்கைகளில் சுறுசுறுப்பான நுட்பம்சார் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த வகையில் இப்போது நாம் சிந்திக்க வேண்டியது அவ்வப்போதைய நுட்பம்சார் அரசியல் மாற்றங்களைப் பற்றியேதான். எனவே பொதுப் போக்குத் தொடர்பான விடயம் எமக்குப் பிரச் சனையானதாக இல்லை. அது எப்போதும் ஒரேமாதிரியானதாகவே இருக்கிறது. ஆனால், இந்த நுட்பம் சார்ந்த அரசியல் என்ன? இது எப்படி அமையப் போகின்றது? என்பதே எம்முடைய அடுத்தகட்டப் பிரச்சினையாகும்.

மொத்தமாகப் பார்க்கின்ற போது இப்போது இருக்கின்ற இன்றைய அரசியல் சூழ்நிலையில் மகிந்த ராஜபக்ஷ அரசாங் கத்தின் இத்தகைய போக்கானது - ஒரு விடயத்துக்கு சவால் விடுவதாக இருக்கிறது. இலங்கையினுடைய வெளியுறவுக் கொள்கை என்பது இலங்கையைப் பொறுத்த வரையில் அது இந்திய, அமெரிக்கா கோட்டுக்கு வெளியே தாண்டமுடியாத ஒரு நிர்ப்பந்தத்தைக் கொண்டுள்ளதாகும். இன்னொரு வகையில் கூறுவதனால் இலங்கைக்கு சர்வதேசம் என்பது இந்தியாவும், அமெரிக்காவும்தான். ஆனால், இலங்கை இப்போது அதற்கு வெளியே ஒரு பரீட்சார்த்தத்தில் ஈடுபட்டிருக்கின்றது. இந்த பரீட்சார்த்தத்தைத்தான் நாம் நுட்ப அரசியல் என்று கூறப் போகின்றோம்.

ஏனெனில், ஒரு பொதுப்போக்கான அரசியலிலிருந்து நகர்ந்து அது ஒரு புதிய மிகவும் நுட்பமான ஒரு இராஜதந்திர அரசியல் கோட்டுக்கு அது நகர்ந்து செல்கின்றது. இந்த நகர்வை இந்தியா எவ்வாறு கையாளப் போகின்றது? இதில் அமெரிக்காவின் பொறுப்பு எப்படி இருக்கப் போகின்றது? இதில் விடுதலைப்புலிகளின் நகர்வுகள் எப்படி இருக்கப் போகின்றன? இனி கொழும்புப் பத்திரிகைகளும், கொழும்பு சார் அரசியல் நிபுணர்களும் எவ்வாறான தீர்மானங்களை, கருத்துக்களை முன்வைக்கப் போகின்றார்கள் என்பதிலிருந்து இதனுடைய கட்டுமானத்தை நாம் நோக்கலாம். ஆனால், ஒரு விடயத்தை கொழும்பு சார்ந்து நாம் தெளிவாகக்கூற முடியும். கொழும்புசார் அரசியல் நிபுணர்களுடைய, இராஜதந்திரிகளுடைய கண்ணோட்டம் எப்போதும் இந்தியாவுக்கு எதிரானதாகவும், தமிழீழ மக்களுக்கு எதிரானதாகவும் இருக்கிறது. எனவே, இயல்பாக அவர்கள் சீனா, பாகிஸ்தான் பக்கம் சார்ந்து சிந்திப்பது அவர்களை அறியாமலேயே அவர்களுக்கு நிகழ்ந்து விடும்.

ஆனபடியால் அவர்களுடைய நிபுணத்துவம் என்பது அறிவுசார்ந்ததாக இல்லாமல் உணர்ச்சி சார்ந்ததாக மாறுகின்ற ஒரு துர்ப்பாக்கியம் அவர்களுக்கு உண்டு. இந்த நிலையில் அவர்களுடைய உணர்ச்சி சார்ந்த தீர்மானங்களுக்கு வெளியே நாம் ஒரு அறிவு சார்ந்த களத்தில் நுழையக்கூடிய ஒரு காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். இவ்வாறான நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த அறிவு சார்ந்த ஒரு நுணுக்கமான நிலைப்பாட்டை எடுப்பார்கள், எடுக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டு.

# மக்களின் எதிர்காலத்துக்காகவே தமிழீழ வைப்பகம் செயற்படுகிறது

## தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர் தெரிவிப்பு



கிளிநொச்சி

தமிழீழ வைப்பகமானது தமிழ் மக்களினதும் தேசத்தினதும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது என தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர் வீரத்தேவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தமிழீழ வைப்பகப் பள்ளிச் சேமிப்பு அலகு திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

போரினால் எமது மக்களின் வாழ்வு, சேமிப்புக்கள் என்பன சீரழிக்கப்பட்ட நிலையில் தமிழீழ தேசிய தலைவரின் தூரநோக்கோடு தமிழீழ வைப்பகம் என்ற அலகு உருவாக்கப்பட்டது.

இதன் பன்னிரெண்டு ஆண்டு கால சேவை மூலம் எமது மக்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர்.

எமது தாயகத்திலும் சரி, வெளிநாடுகளிலும் சரி எமது தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அப்பால் மாணவர்களின் பள்ளிச் சேமிப்பு அலகும் அதனுடைய செயற்பாடுகளும் உணரப்பட்டுள்ளன. அத்தோடு பெற்றோர்கள் மட்டத்தில் சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப்பணிப்பாளர் முருகவேல் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியை வித்தியாலய அதிபர் யோகநாதன் ஏற்றி வைத்தார். தமிழீழ வைப்பகத்தின் பெயர் பலகையை கரைச்சி பிரதேச செயலாளர் சுலோஜினி திரைநீக்கம் செய்து வைத்தார். பள்ளிச் சேமிப்பு அலகுக் கட்டடத்தை, தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர் வீரத்தேவன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பள்ளிச் சேமிப்பு அலகை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர், முகுந்தன், செஞ்சோலைப் பொறுப்பாளர் சுடர்மகள், பிரதேச செயலாளர் சுலோஜினி ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இந்த நிகழ்வின் கருத்துரைகளை உதவிக் கல்விப்பணிப்பாளர் முருகவேல், கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன், வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றியரசன், தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் வீரத் தேவன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சேமிப்பை ஆரம்பித்த மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## காது, தொண்டை சிகிச்சை நிலையம்

வவுனியா

வவுனியா பொது மருத்துவமனையில் காது மற்றும் தொண்டை தொடர்பான நோய்களுக்கான சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மருத்துவமனை அதிகாரி பவானி பசுபதிராசா இந்த நிலையத்தை திறந்துவைத்தார்.

காது,தொண்டை தொடர்பான மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி கே.சீவரத்தினம் உட்பட ஏனைய மருத்துவ அதிகாரிகளும் பணியாளர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சிரமதானப் பணி

மன்னார்

தியாகி அன்னை பூபதியின் 18 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் தமிழீழ காவல் துறையின் சீர்திருத்தப்பிரிவினரால் வீதி சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இதில் பெருமளவான தமிழீழ காவல் துறை உறுப்பினர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். (கு)

## புனரமைக்கப்படாத வீதி

மன்னார்

மன்னார் - சாந்திபுரம் சவுத்பார் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதுள்ளது. இந்த வீதியை அண்டிய பகுதியில் புதிய வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டுள்ள போதும் மக்களின் பிரதான போக்குவரத்து பாதையான இந்த வீதி புனரமைக்கப்படாதுள்ளது குறிப்பிடத்தக்கது. (கு)

## நிதி ஒதுக்கீடு

மன்னார்

மன்னார் பள்ளிமுனையில் நீண்ட நாட்களாக நிலவிவரும் குடிநீர் பற்றாக்குறையை நீக்கும் முகமாக 19 மில்லியன் ரூபா செலவில் நீர் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் 900 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் எதிர் நோக்கி வரும் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவுள்ளது. (கு)

# நவோதயப் பாடசாலைகளாக தரமுயர்த்துமாறு வேண்டுகோள்

மன்னார்

வன்னி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளை நவோதயப் பாடசாலைகளாக தரமுயர்த்தி கல்வி நிலையை மேம்படுத்துமாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - கிராமங்களில் கல்வியை முன்னேற்றும் வகையில் நவோதய பாடசாலைகள் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் ஒன்றென்ற அடிப்படையில் நாட்டின் பல இடங்களிலும் அமைக்கப்பட்டு வருகிறது. எனினும் வன்னி மாவட்டத்திலுள்ள மன்னார் - முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களில் எந்தவொரு பிரதேசசெயலகப் பிரிவிலும் நவோதய பாடசாலைகள் இல்லாததைச் சுட்டிக்காட்டி விரைவில் நவோதய பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு நான் முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளருக்கும், முன்னாள் ஜனாதிபதிக்கும் பல கடிதங்கள் அனுப்பியிருந்தேன்.

இந்த நிலையில் கடந்த வருடம் ஏப்ரல் 12 ஆம் திகதி ஜனாதிபதிக்கும், ஏப்ரல் 20 ஆம் திகதி முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளருக்கும், இந்த விடயம் தொடர்பாக இறுதியான கடிதத்தை அனுப்பியிருந்தேன். இதையடுத்து நவோதய பாடசாலைகள் அலுவல்களுக்குப் பொறுப்பாகவிருந்த ஆசிரியர், கல்வியாசிரியர், முன்னேற்றத்திட்டப் பணிப்பாளரையும் பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் சந்தித்து இது பற்றி உரையாடினேன்.

அதேவேளை நவோதயத்துக்கு மாகாண ரீதியில் பொறுப்பாகவுள்ள மாகாண ஒருங்கிணைப்பு அதிகாரிகள் கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகப் பிரத்தியேகமாக நவோதய பாடசாலைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவங்கள் உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டு மாகாண கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன், அது அனுப்பி வைக்கப்பட்டால்தான் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் எனப் பணிப்பாளர் என்னிடம் தெரிவித்தார்.

இந்த நிலையில் முல்லைத்தீவு - மன்னார் மாவட்டங்களின் சனத்தொகை, பாடசாலைகளுக்கிடையிலான தூரம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகக் கருத்தில் கொண்டு இரண்டு மாவட்டங்களிலும் இயங்கும் கல்வி வலயங்களுக்கும் பொறுப்பான வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு நவோதய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட வேண்டிய பாடசாலைகளின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு உரிய இடத்துக்கு அந்தப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டது.

எனவே, வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் மாகாண ரீதியில் தரம் உயர்த்தப்பட வேண்டிய பாடசாலைகளின் பட்டியலில் என்னால் சிபார்சு செய்யப்பட்ட மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுக்குள் கிராமப்புற பாடசாலைகளும் இருந்தமையை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுகின்றேன்.

எனது சிபார்சில் 9 பாடசாலைகளில் மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மட்டுமே நவோதயப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டதாக அறிந்து கொண்டேன்.

எனவே இந்த விடயம் தொடர்பாக நான் வேண்டுவது வன்னி மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இரண்டு மாவட்டங்களின் பிரதேச செயலகங்களின் கிராமிய சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு அங்கு நவோதயப் பாடசாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக என்னால் சிபார்சு செய்யப்பட்ட 9 பாடசாலைகளில் நவோதயப் பாடசாலைகளாக இன்னும் தரமுயர்த்தப்படாத விடத்தல்தீவு, பெரிய பண்டிவிரிச்சான், முருங்கன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, பாலிநகர், முத்தையன்கட்டு, யோகபுரம் ஆகிய கிராமங்களில் இயங்கும் மற்றைய எட்டுப் பாடசாலைகளின் விபரங்களையும் அனுப்பி வைக்கிறேன் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மோ)


## மகளை போராட்டத்தில் இணைத்த தாய்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் கோரக்கன் கட்டைச் சேர்ந்த தாய் ஒருவர் தாமாக முன்வந்து தனது மகளை தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இணைத்துள்ளார்.

பரந்தன் கோரக்கன் கட்டில் வசிக்கும் கறுப்பையா-மாரி என்ற தாயாரே அவரது மகளான (வயது 19) க. அஞ்சலா என்பவரை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துள்ளார்.

கிளிநொச்சி தமிழீழ அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து இவர் மகளைப் போராட்டத்தில் இணைத்தார். (09)



வவுனியா வன்னேரி - குஞ்சுக்குளம் அரிசி ஆலை திறப்புவிழாவில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவன் சு.சிவசூரியாவினால் ஐந்து அம்சக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.இராசநாயகத்திடம் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம் : கிருஸ்ணா)

# அரசு எம்மீது போரைத் திணித்தால் அதனை எதிர்கொள்ள நாங்கள் தயார்

## தளபதி வேலவன் தெரிவிப்பு

வவுனியா

அரசு எம்மீது போரைத்திணித்தால் அதனை எதிர்கொள்ள நாங்கள் தயார் என்று தளபதி வேலவன் தெரிவித்தார்.

வவுனியா கனகராயன்குள மக்கள் நேற்றுமுன்தினம் களமுனைக்குச் சென்று உலருணவுப்பொருட்களை வழங்கியவேளை அதனை ஏற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பேரினவாதிகள் ஒன்றை மட்டும் விளங்கிக்கொள்ள வேண்டும் எமது தலைவர் ஏற்படுத்தியிருக்கும் சமாதானத்தைக் குழப்பி எம்மீது போரைத் தொடர்ந்தால் நாம் எமக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கும் மக்களின் முழுமையான பலத்துடன் வெற்றி பெறுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து மக்களை வரவேற்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ஞானம் தலைமையில் நண்பகல் 12 மணிக்கு விளக்குவைத்த குளம் விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - தளபதிகளான ஆதவன், அப்பன், வல்லவன், குமணன் ஆகியோர் உட்பட பெருமளவிலான போராளிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த மக்கள் எதிரியின் அராஜகத்துக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தோளோடு தோள் கொடுத்து போராடப்போவதாகத் தெரிவித்தனர்.

தொடர்ந்து அவர்கள் கொண்டு சென்ற உணவுப்பொருட்களைப் பரிமாறிக்கொண்டதுடன், போராளிகளுடன் அளவளாவி மகிழ்ந்தனர். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
சிறுகாப்பின் பேரிடத்தது ஆகி உறுபகை
ஊக்கம் அளிப்பது அரண்
- திருக்குறள்

## நமது நோக்கு

# விரைவில் புரிந்துவிடும்!

இலங்கை சமாதான முயற்சிகளுக்கான விசேட தூதுவரான ஜோன் ஹன்சன் பௌயர் கொழும்பு வந்ததை அடுத்து - அவர் மீது தாக்குதலை தொடுத்திருக்கிறார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச.

தேசப்பற்று இயக்கம் என்ற பெயரில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவரை கண்டபடி விமர்சித்திருக்கிறார். ஏற்கனவே கடந்த ஐந்து ஆண்டுகளாக "வெள்ளைப்புலி" என சொல்ஹெய்ம் மீது சொல்லெறி நடத்தியவர்கள் தான் ஜே.வி.பியினர்.

இப்போது விசேட தூதுவர் பொறுப்பில் பௌயர் வந்ததுமே - அவர்மீது திரும்பியுள்ளது இவர்களின் கோபம். சமாதான முயற்சியில் நோர்வே ஈடுபடுவதையே ஜே.வி.பி போன்ற சக்திகள் எதிர்க்கின்ற நிலையில், சொல்ஹெய்ம் என்ன, பௌயர் என்ன, யார் வந்தாலுமே - வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் என்ன, கால் பட்டால் என்ன குற்றம் என்ற நிலைதான்.

பௌயர் மீது சொல்லெறி நடத்திய விமல் வீரவன்ச - சூடான், பலஸ்தீனம் போன்ற நாடுகளின் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு அந்த நாடுகளைப் பிளவுபடுத்தியவர் என்றும், அது போலவே இலங்கையைப் பிளவுபடுத்தி, புலிகளுக்கு தனி ஈழத்தைப் பெற்றுக்கொடுக்க வந்திருப்பதாகவும் காட்டமாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்தக் கருத்தின் மூலம் விமல் வீரவன்சவின் அறியாமையும், அவரது ஆழ்மன நிலைப்பாடும் எத்தகையது என்பது உலகுக்குத் தெரியவந்திருக்கிறது.

முதலாவது சூடான் பற்றியது. சூடான் சமாதான முயற்சிகளில் நோர்வே அரசின் ஆதரவு பெற்ற ஒரு அமைப்பே ஈடுபட்டதாயினும், அதில் எந்த வகையிலும் ஜோன் ஹன்சன் பௌயர் பங்கேற்கவில்லை. இதை நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் பி.பி.சி சிங்கள சேவைக்கு தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

சூடான் அமைதி முயற்சிகளில் பங்கேற்காத ஒருவரை, அந்த நாட்டைப் பிளவுபடுத்தியவர் என்று அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்தி தனது விவேகமற்ற தன்மையையும், அறியாமையையும் உலகுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார் விமல்வீரவன்ச.

அதுபோலவே, பலஸ்தீனத்தை பிளவுபடுத்தி தனி நாடாக்கியவர் என்று விமல் வீரவன்ச குறிப்பிட்டிருக்கிறார். பலஸ்தீனப் பிரச்சினைத் தீர்வில் பௌயர் சம்பந்தப்பட்டிருந்தது உண்மையே.

ஆனால், பலஸ்தீன தனியரசு அமைவதை உலகமே விரும்பியபோது - விமல் வீரவன்ச மட்டும் ஏன் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார் என்ற கேள்விக்கு நாம் விடை காண முனையும் போது - அவர் மிகப்பெரிய பச்சோந்தியாகவே தெரிகிறார்.

உதட்டளவில் சமத்துவம், உடையளவில் சோசலிசம் பேசிக்கொண்டு உல்லாச வாழ்வு வாழும் விமல் வீரவன்ச - தினமும் ஹில்டன் ஹொட்டேலில் முகச்சவரம் செய்ய 5 ஆயிரம் ரூபாவையும், செல்போன் மாத வாடகையாக 2 லட்சம் ரூபாவையும் செலவிடுவதாக சிங்களப் பத்திரிகைகள் அண்மையில் விமர்சனம் செய்திருந்தன.

இதெல்லாம் எந்தளவுக்கு உண்மையாக இருக்கும் என்பதை பலஸ்தீனப் பிரிவினை குறித்த அவரது கருத்தே எடுத்தியம்பும்.

பலஸ்தீன மக்களை இஸ்ரேல் அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி வந்த போது - அந்த மக்களுக்காக அமெரிக்கா போன்ற முதலாளித்துவ சக்திகள் தவிர்ந்த அனைத்து நாடுகளுமே அனுதாபப்பட்டன.

அரபாத் நிழல் அரசைப் பிரகடனம் செய்த போது பெருமளவிலான நாடுகள் தூதரக அந்தஸ்தைக் கூட (இலங்கையும்) வழங்கின. இஸ்ரேலுடன் கைகோர்த்து பலஸ்தீன எதிர்ப்பை நியாயப்படுத்திய நாடுகள் மிகக் குறைவே.


இப்படியிருக்கும்போது உலகின் கருத்தை தவறானதெனக் காட்டும் வகையிலும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் வகையிலும் விமல் வீரவன்ச கருத்து வெளியிட்டிருப்பது, ஜே.வி.பிக்கு வெட்கக் கேடானது.

பௌயரைத் தாக்கவேண்டும் என்பதற்காக, பலஸ்தீன பிரிவினைக்கு காரணமானவர் என்று கூறுவது எத்தனை மடமைத்தனமானது என்பது விமல் வீரவன்சவுக்கு புரியவில்லையோ தெரியவில்லை.

ஏதோ காய்க்கிற மரத்துக்குக் கல்லெறி என்பது போலவே, நோர்வேயின் நிலையும் வந்துவிட்டது. நோர்வே எது செய்தாலும் குற்றம் என்று கிளம்பிவிட்ட ஜே.வி.பியும், அதன் தோழர்களும்(?) உலகப் பொது நியதியை மறந்து விட்டு - இனவாதமே தம்மை வாழவைக்கும் எனக் கருதுவது பச்சை மடமைத்தனம் என்பது அவர்களுக்குப் விரைவிலேயே புரிந்துவிடும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# "மூஞ்சூறு விளக்குமாற்றைக் காவினது"

## போல மெர்வின் சில்வாவின் விபரீத ஆசை!

"தான் போக வழியைக் காணோமாம், மூச்சூறு விளக்கு மாற்றையும் காவிக்கொண்டு போச்சுதாம்" என்றொரு பழமொழி தமிழில் இருக்கிறது. பிரதித் தொழில் அமைச்சர் மெர்வின் சில்வாவின் கூற்றுக்கள் சிலவற்றைக் கவனித்தால் இந்தப் பழமொழி தான் நினைவுக்கு வருகிறதென்று சொல்லிக்கொண்டு என் எதிரில் வந்தமர்ந்தார் பரதேசியார்.

எதைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வருகிறீர் என்று கேட்டேன். வேறு யாரைப் பற்றிச் சொல்ல இருக்கு; எங்கே போனாலும் ஏதாவது சுறட்டை வலிய இழுத்து வம்பை விலைக்கு வாங்கு பவர் என்று பலராலும் சொல்லப்படும் பிரதியமைச்சர் மெர்வின் சில்வா பற்றித்தான் சொன்னேன் என்றார் நண்பர்.

அப்படியென்ன புதினம் என்று நான் கேட்டதும் அவர் இப்போது பாதுகாப்பாக நாடாளுமன்றத்துக்குள்ளேயிருந்துதான் பேசியிருக்கிறார். அவர் எதைப்பற்றியும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது.

ஆனால், பதில் சொல்வதற்குச் சந்தர்ப்பமில்லாதவர்களைப் பற்றி நாடாளுமன்றத்தில் வம்புக்கிழுத்துப் பேசுவது கௌரவமல்ல. நாகரிகமுமல்ல என்பதைச் சுட்டிக் காட்டத் தான் வேண்டும் என்றார் பரதேசியார்.

### ஊர்சுற்றியார் பார்வையில்

ஆயுதங்களைத் தன்னிடம் ஒப்படைத்தால் பத்தாயிரம் விடுதலை உறுப்பினர்களைக் கொரியாவுக்கு அனுப்புவதற்குத் தயாராக இருப்பதாக மெர்வின் சில்வா தெரிவித்திருக்கிறார். விடுதலைப் புலிகள் கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அங்கு பிரச்சினைகள் எழுமானால் அவற்றைத் தீர்த்து வைக்கவும் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் சொல்லியிருக்கிறார் என்று பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறதே என்றேன்.

"இதற்காகத்தான் நான் அந்த மூஞ்சூற்றுப் பழமொழியைச் சொன்னேன். அரச படைகளில் சேர்ந்திருப்பவர்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதற்கு வசதியில்லாதவர்கள். வேறு வழியின்றி அதிகம் கல்வி கற்காமலும் குறைந்த வயதிலும் அதிகம் கஷ்டப்பட்டுப் பயிற்சி பெறாமலும் படைகளில் வேலை கிடைப்பதால் துப்பாக்கி தூக்கக்கூடிய தைரியம் இருப்பதால் சிறு பயிற்சி பெற்றதுடன் நல்ல சம்பளம் கிடைக்கக்கூடிய வேலை கிடைக்கிறதென்ற சந்தர்ப்பத்தைவிடாமல் பட்டாளத்தில் சேர்ந்து விடுகிறார்கள். இப்படி சுலபமாகப் படைகளில் சேர்ந்தபடியால்தான் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் விடுதலைப் புலி இளைஞர்களின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதங்களையும் தூக்கிக்கொண்டு மறைந்து விட்டனர்! பட்டாளத்திலிருந்து தப்பியோடி குற்றச்செயல்களில் ஈடுபடும் சிங்கள இளைஞர்கள் பல சமயங்களில் காவல்துறையினரிடம் மாட்டிக் கொள்கின்றனர். தப்பியோடிய படையினருக்கு மன்னிப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் வேலையில்லாமல் படைகளிலிருந்து தப்பியோடியோர் குற்றச் செயல்களில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வர்களை வேண்டுமானால் கொரியாவுக்கு மெர்வின் சில்வா அனுப்பினால் அவருக்கு நல்ல பெயரும் கிடைக்கும். சிலசமயம் எதிர்காலத்தில் அவருக்கு வாக்குகளும் கிடைக்கலாம். விடுதலைப் புலிகள் வேலை தேடி இணைந்த இளைஞர்களல்லர். அவர்கள் கொள்கைப்பற்றுள்ள தமது மண்ணுக்காகத் தம்மையே தியாகம் செய்வதற்கு உறுதி பூண்டு விடுதலைப்போரில் தம்மை அர்ப்பணித்திருப்பவர்கள் என்பதை மெர்வின் சில்வா அறியமாட்டார் என்று பரதேசியார் சொன்னார்.

தாங்களும் விடுதலைப் புலிகள்தான் பேச்சுவார்த்தையில் தங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கருணா குழுவைச் சேர்ந்தவர் ஒருவர் நோர்வே அனுசரணையாளர்களுக்குக் கோரிக்கை விடுத்திருப்பதாக ஆங்கிலப் பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டிருக்கிறதே பார்த்தீரா? என்று கேட்டேன்.

ஜெனிவா மாநாட்டுக்குப் பின் ஆயுதங்களைக் களைவதிலிருந்து தவிர்க்கவும் இந்த ஆயுதக்குழுக்கள் தாங்களும் அரசியல் பணி செய்வதாக வேஷம் போடவும் படாதபாடுபடுகின்றன. இலங்கை அரசாங்கப் படைகளின் பாதுகாப்பில் அவர்களுடைய பாதுகாப்புப் படைமுகாம்கள், காவல்துறை முகாம்களுக்குச் சமீபமாக இந்தக் குழுக்கள் முகாம் அமைத்து அவைகளின் பாதுகாப்புப் பார்வையிலேயே தங்கியிருக்கின்றன. ஏன்? எதற்காக இவை தங்கியிருக்கின்றன என்பது அவர்களுக்குத்தான் தெரியும். பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பில் இவர்கள் அமைத்துள்ள முகாம்களுக்குப் பக்கத்தில் மாணவ மாணவியர் பெருமளவில் கல்வி கற்கும் கல்லூரிகள், பாடசாலைகள் இருக்கின்றன.

பிள்ளைகள் தங்கியிருந்து படிக்கும் கல்லூரிகளுக்கருகிலேயே இவர்கள் தங்கள் முகாம்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் பாதுகாப்புப் படை யின்பாதுகாப்பில் ஆயுதங்களைச் சுமந்து கொண்டு - கிழக்கில் திரியும் இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் நிதியும் வசூலித்துச் செலவிடுகின்றனர். எந்தவிதக் குறிக்கோளுமில்லாமல் விடுதலைப் புலிகள் இயங்குவது போல தாமும் இயங்குவதாகக் காட்டிக் கொள்ளப் பெரும்பாடுபடுகின்றனர். மட்டக்களப்பில் பொது மக்களைப் பொறுத்தவரையில் ஆடுகிற ஆட்டமெல்லாம் ஆடட்டும் வருவாங்கள், வந்து சரியாகத் தருவாங்கள் என்ற சொல்லி நிம்மதி அடைகின்றனர் என்று பரதேசியார் சொன்னார்.

எங்கேயும் தங்கி நிற்க வழியில்லாமல் அரச படைகளின் பாதுகாப்பில் காலத்தை ஓட்டும் இந்த ஆயுதக்குழுக்களை பிரதி அமைச்சர் மெர்வின் சில்வா கொரியாவுக்குக் கப்பலேற்றி விட்டால் அரசாங்கத்துக்குச் செலவும் குறையும், தொல்லையும் கொஞ்சம் விலகும். நாடும் கொஞ்சம் வெளிக்கும் என்று சொன்னேன்.

மெர்வின் சில்வா இவர்களை அனுப்ப முன்வந்தாலும் கொரிய அரசு இவர்களை ஏற்று அங்கு சமாளிப்பதற்கு முன்வர வேண்டுமே என்று கேட்டார் பரதேசியார்.

தென்னிலங்கையில் வேலையில்லாமல் பாதாள உலகக் கோஷ்டியென்ற பெயரில் பலர் இன்னமும் திரிகிறார்கள். முன்பு அரசியல் நெருக்கடி ஏற்படும் சமயங்களில் இவர்கள் தமிழ் மக்களுக்கெதிராகக் கூச்சலைக் கிளப்பி கொள்ளை, கொலைகளில் ஈடுபடுவார்கள். இப்பொழுது விடுதலைப் புலிகளின் கைகளில் ஆயுதங்களிலிருப்பதால் என்னதான் துவேஷத்தைக் கிளப்பி இனவாதிகள் பேசினாலும், அறிக்கை விட்டாலும் இனக்கலவரங்களில் ஈடுபடுவதற்கு எவருக்கும் துணிவில்லை என்று சொன்னேன்.

ஜே.வி.பி இன்னமும் நோர்வேயை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று குரல் எழுப்பிக்கொண்டு தானிருக்கிறது. சூடானையும், பலஸ்தீனத்தையும் பிரித்தது போல இலங்கையையும் பிரித்து விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் சூழ்ச்சியில் நோர்வே ஈடுபட்டிருப்பதாக ஜே.வி.பி குற்றம்சாட்டி முழங்கிக் கொண்டிருக்கிறது. பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கும், அது திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது என்று பரதேசியார் சொன்னார்.

நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் என்று இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி ஆரம்பமான 1949ஆம் ஆண்டிலேயே சிங்கள அரசியல்வாதிகள் குரல் கொடுக்கத் தொடங்கினார்கள். 1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சியினர் காந்தீய வழியில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியபோதும் ஜனநாயக வழியில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்துப் பொதுத்தேர்தலில் போட்டியிட்டபோதெல்லாம் நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்றும் அவர்களுக்கு உடந்தையாக இருப்பதாகவும் இருபெரும் கட்சித் தலைவர்களும் மாறிமாறிக் குற்றம் சாட்டி வந்தனர். இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டனர். தொடர்ந்து இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டு தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில்தான் தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் பாதுகாப்பதற்கெனத் தமிழ் இளைஞர்கள் பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினர். இன்று இலங்கையில் சிறிலங்கா அரசாங்கத்துக்குச் சமதையாக தமிழீழ அரசு தமிழீழத் தாயகத்தில் ஒரு பகுதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நிர்வாகத்தைக் குழப்பவும், வெளிநாடுகளில் தமிழீழ நிர்வாகத்துக்குக் கெட்ட பெயர் உண்டாக்கவும் கோடரிக்காம்புகளையும் அரசும், படையினரும் பேரினவாதிகளும் உருவாக்கி கூத்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

ஆனால், இந்தப் போக்கிரித்தனம் அதிக நாள் நீடிக்காது. விரைவில் குட்டு அம்பலமாகும் என்று சொல்லிப் பரதேசியார் எழுந்து நடந்தார். ☆

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி? 07.04.2006 - 13.04.2006

| | | | |
|---|---|---|---|
| சூ ராகு | | | செ |
| புத, சுக் யுரே | 08 இ 10-40 சிங் - சந்<br>11 ப 11 - 36 கன் - சந்<br>11 மா 5-55 மீன - புத<br>13 இ 11 - 20 துல - சந் | | சந் சனி |
| நெப் | | | |
| | | குரு | கேது |

## மேடம்
(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இந்தவாரம் பெரும்பாலும் கஷ்ட பலன்களே தென்படுகிறது. குடும்பத்தில் மன நிம்மதி இருக்காது. இடையிடையே சச்சரவுகள் தோன்றும். பணக்கஷ்டம் அதிகரிக்கும். எடுத்த கருமங்கள் கைகூடாது. தேகசுகமும் பாதிப்படையும். திருமணம் போன்ற மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். பதவி உயர்வுகளோ, நன்மாற்றங்களோ கிடைப்பது கடினம். பிரயாணங்களில் பல சிரமங்கள் ஏற்படும். வர்த்தகர்களுக்கு வியாபார வளர்ச்சி குன்றும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். நிதிப்பற்றாக்குறை இருக்கும். வங்கி உதவிகள் கிடையாது. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். ஒப்பந்த வேலைகளில் பல தொல்லைகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் தடைப்படும்.

## இடபம்
(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக இருந்தாலும், அவ்வப்போது சச்சரவுகள் தோன்றும். பணவருவாய் ஓரளவு இருப்பினும், செலவுகள் மிதமிஞ்சிக் காணப்படும். தொடங்குங் கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். திருமணம் முதலிய மங்கள கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பான வேலைகள் சரிவரச் செய்ய முடியாமலிருக்கும். எனினும் அவற்றை சகஉதவிகளுடன் சமாளிக்க முடியும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை தேவை. தொழிலாளருக்கு தொழில் விருத்தி குறையும். புதிய தொழில்கள் கிடைப்பது குறைவாகவே இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடிய ஊக்கம் தேவை. பரீட்சைப் பெறுபேறுகள் சுமாராக இருக்கும்.

## மிதுனம்
(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வில் சந்தோசம் கிட்டும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வர். பணவருவாய் நன்றாக அமையும். தொடங்கும் கருமங்கள் அதிக பிரச்சினையில்லாமல் கைகூடும். திருமணம் போன்ற மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு சேவை நலன் பாராட்டப்படும். பிரயாசைக்கேற்ப லாபம் கிடைக்கும். அதிகாரிகளுடன் சேர்ந்து இயங்குவது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். முதலீடுகள் ஓரளவு லாபத்தைத் தரும். வங்கி உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் நன்று. புதுத் தொழில் தொடங்குவதற்கு கீலம் அனுகூலமாக இருக்கும். வருமானமும் நன்று. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு. பரீட்சைகளில் சித்தி கிட்டும்.

## கடகம்
(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற் படும். எதிர்பாராத பணவருவாய் கிடைக்கும். புத்திரர்களால் உதவி உண்டு. வீடுகளில் சுபநிகழ்வுகள் ஏற்படலாம். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். திருமண விடயங்கள் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள், பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிகச் சிறப்பாக இருக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். ஆடை, ஆபரண வியாபாரிகள் கூடுதல் லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைத்த வண்ணமிருக்கும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னணியில் நிற்பர். உயர்கல்வி, வெளிநாட்டுக் கல்வி அனுகூலங்கள் உண்டு.

## சிங்கம்
(மகம், பூரம், உத்தரம்1)




சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் கஷ்டபலன்களே கூடுதலாக இருக்கிறது. உழைப்புக்கேற்ற வருமானம் கிடையாது. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். தேகசுகம் குறைவடைவதால், வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர்களால் தொல்லை ஏற்படும். திருமண விடயங்கள் கைகூடாது. இழுபறியைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகள் கடுகடென்று இருப்பார்கள். பொறுமையைக் கடைப்பிடித்து செயற்படுவது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். போட்டி பொறாமை அதிகரிக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளருக்கு தொழில் வாய்ப்புக்கள் குறையும். உழைப்புக்கேற்ற வருவாய் கிட்டாது. மாணவர்களுக்கு கல்வியில் கடின ஊக்கம் தேவை.

## கன்னி
(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் பல சிறப்பான பலன்கள் நடக்கும். குடும்பத்தில் கணவன் மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், கலகலப்பும் காணப்டும். எதிர்பாராத பணவருவாய் வந்து சேரும். புத்திரர்களால் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வருவாய் கிட்டும். 'தேகசுகம் பாதிக்காது. திருமண கருமங்கள் சிறப்பாக மனம்போல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் அனுசரணை கிட்டும். அலுவலகை கருமங்கள் சீராக நடக்கும். ஊதிய உயர்வுகளும் கிடைக்கும். கௌரவம் உயரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். சிறந்த லாபம் கிடைக்கும். சிலருக்கு வீடு கட்டப் பண உதவி கிடைக்கும். கடைகள் பெருப்பிக்க நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் நிறைய உண்டு. வருவாயும் அதிகமாகும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமடையும். பரீட்சைகளில் சிறப்புச் சித்தி கிட்டும்.

## துலாம்
(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக இருந்தாலும், இடையிடையே சச்சரவுகள் ஏற்பட்ட வண்ணமிருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். பண வருவாய் ஓரளவு திருப்தியைக் கொடுக்கும். எனினும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. மங்கள கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புகள், வேலைப்பளு அதிகரிக்கும். ஆயினும் சக உதவிகளுடன் சமாளிக்கலாம். வியாபாரிகளுக்கு தொழில் மத்திமமாகவே இருக்கும். நிதிப்பற்றாக்குறை ஏற்படும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. தொழிலாளர்களுக்கு தொழில் மத்திமமாகவே இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் தாமதமாகும். மாணவர்களுக்கு கடின முயற்சி தேவை.

## விருச்சிகம்
(விசாகம் 4, அனுஷம், கேட்டை)



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை நன்றாக இருக்கும். தொழில், பண வருவாய் நன்றாக அமையும். குடும்ப அங்கத்தவர்களுக்குள் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவிகள் கிட்டும். பெரியோர்கள் ஆதரவு தருவார்கள். திருமண கைங்கரியங்களுக்கு அதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். உடன் பணி புரிவோர் உதவியாக இருப்பர். உயர்ச்சிகள் ஏற்பட இடமுண்டு. வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகள் நல்ல முறையில் இருக்கும். முதலீடுகள் லாபந்தரும். வங்கிகள் கை கொடுக்கும். தொழிலாளர்களுக்கு தொழிலில் ஆர்வமும் நம்பிக்கையும் ஏற்படும். வருமானம் சிறக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றமும் சித்திகளும் உண்டு.

## தனுசு
(மூலம், பூராடம், உத்தராடம், 1)



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் சண்டை சச்சரவுகள் அதிகரிக்கும். மன அமைதி குன்றும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். எடுத்த கருமங்கள் நிறைவேறாது. பிரயாணங்களில் அலைச்சல்கள் தோன்றும். உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்காது. மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவும், பொறுப்புகளும் அதிகமாக இருக்கும். சக உதவிகள் குறையும். அதிகாரிகள் கடும் போக்கைக் கடைப்பிடிப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

## மகரம்
(உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)



மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை சுமுகமாக இருந்தாலும், இடையிடையே கருத்து வேறுபாடு தோன்றும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். பண வருவாய் ஓரளவு இருப்பினும், செலவுகளும் சரிவர இருக்கும். மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமாகும். எனினும், சக உதவிகளுடன் சமாளிக்க முடியும். ஊதிய உயர்வு என்பன தள்ளிப் போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக இருக்கும். முதலீடுகளில் லாபம் மத்திமமாகும். தொழிலாளர்களுக்கு கடின உழைப்பு தேவைப்படும். எனினும், குறைந்த பட்ச லாபமே கிடைக்கும். மாணவர்கள் அவசர புத்தியைத் தவிர்த்தல் நன்று. கடின முயற்சி தேவை.

## கும்பம்
(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)




கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி சிறப்பாக இருக்கும். கணவன்-மனைவியிடையே அந்நியோன்யம் வலுக்கும். பணவருவாய் சிறப்பாக அமையும். வெளிநாட்டு விவகாரங்களில் அனுகூலமான பலன் கிடைக்கும். உறவினர்களின் கொண்டாட்டங்கள் வலுக்கும். மங்கள கருமங்கள் மனம் போல சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு ஏற்படும். வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகள் சிறப்பாக இருக்கும். முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் நன்று. புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். மாணவர்களுக்கு பரீட்சைகளில் சிறப்புச் சித்தி உண்டு.

## மீனம்
(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பம் நன்றாக இருக்கும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் நடப்பார்கள். புத்திரர்களால் உதவி உண்டு. தொழில் வருவாய் திருப்திகரமாக அமையும். எடுத்த கருமங்கள் அனுகூலமான பலனைக் காட்டும். மங்கள கருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு பணிகள் சீராக நடக்கும். அதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். மதிப்பு உயரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் உண்டு. எனினும், கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்களால் லாபமுண்டு. இயந்திரத் தொழிலாளர் லாபமடைவர். மாணவர்களுக்கு பரீட்சைகளில் சித்தியும், உயர்கல்வி அனுகூலமும் கிட்டும்.

## உலகை வலம் வர வேண்டும்



இன்று பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் அகவை அறுபது நிறைவு நினைக்கப்படுகிறது. மனித வாழ்வியலில் அகவை அறுபது ஒரு நிறைவான வாழ்வைச் சுட்டி நிற்கும் தளம். இதுவரை கடந்து வந்த வாழ்க்கைப் பாதையை ஒரு முறை மீள நினைத்து இனித் தொடர்ந்து செல்ல இருக்கும் பாதையைத் தெரிவு செய்யும் காலம். குடும்பக் கடமைகளை நிறைவு செய்து சமூகப் பணியில் இணையவிழையும் காலமும் இதுவே. சாதாரண மக்களுக்கு இந்த நிலை பொருந்தக் கூடும்.

ஆனால் தமிழ் மொழியைக் கற்று, அதனைப் பிறர்க்குப் பயிற்றும் தமிழ்ப் புலமையாளர்க்கு வயது அறுபது பிறிதொரு சிறப்பான பணியை முன்னெடுக்கும் காலமாக அமைகிறது. தான் கற்றதை, நன்கு உணர்ந்ததைப் பதிவு செய்து எதிர்காலத் தலைமுறையினர்க்கு வழங்கவேண்டிய அறிவுக் கொடையைத் தொடங்கும் காலமாகும். கல்வியால் பெற்ற தெளிவை மற்றவரோடு பகிர்ந்து கொள் ளும் புலமை கிழ்வின் செயற்பாடுகளையும் நிறைவேற்றும் காலமும் இதுவே.

இந்தக் கருத்தை மீளக் கொணரும் பணியாகப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவுக்கு - தமிழார்வலர் ஒரு அன்புக் கையுறையை இன்று வழங்கும் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். பேராசிரியரது பிறப்பும், வளர்ப்பும் பண்பட்ட சமூகத்தால் வளம் பெற்றவை.

இயற்கை வளம் குறைந்த வடமராட்சியில் புலமை வளத்தால் பணி செய்த தமிழ்ச் சான்றோர் வரிசையில் இவரும் இணைந்து நிற்கிறார். தமிழிலக்கிய வரலாற்றில் ஈழத்து இலக்கியவரலாறு என்ற ஊற்றுக் கண்ணைத் திறந்து விட்ட பேராசியர் க.கைலாசபதியின் மாணவன் என்பதை நன்குணர்த்தப் பணிசெய்பவர். நாட்டுப் புறவாழ்வியலின் எளிமையான கோலமும், மொழியின் மனப்பதிவுகளும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவை ஏனைய தமிழ்ப் புலமைச் சான்றோரிலிருந்து சிறப்புற வேறுபடுத்திக் காட்டும் அணிகலன்கள். கதை கூறும் மரபு ஒன்றின் மூலமாகத் தமிழார்வத்தை எல்லோருடைய உள்ளங்களிலும் ஊற்றெடுக்க வைக்கும் புலமைத்திறன் இவருடைய சிறப்புத் தகைமை.

மேலைத்தேயப் புலமையாளர், கீழைத்தேயப் புலமையின் மூலத்தைத் தேடும் பணியில் முனைப்பாகச் செயலாற்றும் இந்தக் கால கட்டத்தில் அவர்களுக்குப் பேராசியர் ஒரு தகவல்களஞ்சியம். இனிவரும் காலங்களில் எம் முன்னோர் வாழ்வியலையும், இருப்பையும், உள்ளத்து உறுதியையும் அறிய விரும்புவோர்க்குப் பேராசிரியரின் வழிகாட்டல் மிகவும் இன்றியமையாதது.

இந்தப் பணி ஈழத்தில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்து தமிழர் வாழும் அத்தனை நாடுகளிலும் தொடர வேண்டியுள்ளது. அதற்காக இந்த அகவை அறுபது மேலும் பல்லாண்டு நீடூழி வளரவேண்டும், குன்றாத இளமைப் புலமையுடன் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா உலகை வலம் வரவேண்டும், உலக அரங்கில் தமிழணங்கைப் பொலிவுற நிறுத்தத் தொடர்ந்தும் பணி யாற்ற வேண்டும். இதுவே எமது வாழ்த்தும் ஆசியுமாகும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

# படையினர் நடத்தும் பொதுநிகழ்வுகளில் பொதுமக்கள் பங்குபற்ற வேண்டாம்!

## யாழ்.பொங்கியெழும் மக்கள் படை அறிவிப்பு

யாழ்ப்பாணம் —

இராணுவத்தினர் நடத்தும் விளையாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்வுகளில் மாணவர்கள், சனசமூக நிலையத்தினர், விளையாட்டுக் கழகங்கள், தனியார் கல்வி நிலையங்கள் கலந்து கொள்வதை தவிர்க்கும்படி யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை அறிவித்துள்ளது.

சாவகச்சேரி வணிகர் சங்கத்தின் பெயரால் இராணுவத்தினர் நடத்தும் புத்தாண்டு நிகழ்வுகளை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்கள் என்ற தலைப்பில் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

மக்களை திசை திருப்பும் நோக்குடன் சிங்கள இனவாத ஆக்கிரமிப்பு படைகளால் திட்டமிட்ட வகையில், சாவகச்சேரி வணிகர் சங்கத்தின் பெயரைப் பயன்படுத்தி புத்தாண்டு தினத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் தமிழ் மக்களின் வருடப்பிறப்புக்கு மாறாக விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்த படைத்தரப்பு பகீரத முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

தமிழ் மக்களை நாள் தோறும் சொல்லொணாத் துன்பத்திலும், துயரத்திலும் தள்ளிவிட்டு - அவர்களை படுகொலைசெய்தும், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி வரும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளும் அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளும் செய்துவரும் அக்கிரமங்களை தமிழ் மக்கள் மறந்து விடவில்லை.

இந்த நிலையில், விளையாட்டுப் போட்டி என்ற பெயரால் தமிழ் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையில் சிங்கள படைத்தரப்பும், அதன் தளபதிகளும் தாம் செய்த கொடுமைகளை தமிழ் மக்கள் மறந்துவிட்டதாக எண்ணி - மயக்கத்தில் பகல் கனவு காண்கிறார்கள்.

கடந்த மூன்று மாதகால இடைவெளிக்குள் சிங்களப்படைகள் நடத்திய ஊழிக்கூத்தால் அறுபது தமிழ் இளைஞர்கள் கைதாகி காணாமல் போயுள்ளனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களும் ஆக்கிரமிப்புப் படைகளால் பறிக்கப்பட்டதும், ஆயிரக்கணக்கான மக்கள் படையினரின் கொலை வெறியாட்டத்தில் சிக்கி இரத்த சகதிக்குள் சீரழிக்கப்பட்டமையும், சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், தாக்குதல்கள் தொடர்வதையும் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை.

தென்மராட்சி பிரதேசத்தில் மட்டும் ஒன்பது பொதுமக்களின் உயிர்கள் படையினர் துப்பாக்கி வேட்டுக்களால் பலியெடுக்கப்பட்டதை இவ்வளவு குறுகிய காலத்தில் மக்கள் மறந்திருப்பார்கள் என படைத்தரப்பு நம்புவது ஏமாற்றமே!

இந்த நிலையில், அரை மயக்கத்தில், அழிவின் பாதைக்குள் நிற்கும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் நடத்தும் எந்தவித, நிகழ்சிகளிலோ உங்களது பிள்ளைகளை பங்கு கொள்ள அனுமதிக்க வேண்டாம் என்றும் நாம் பணிவுடன் வேண்டிக்கொள்வதுடன் - விளையாட்டுக் கழகங்களோ, பாடசாலை சமூகமோ, முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் எவையும் இவ்விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றுவதை தவிர்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இந்த போட்டிகளில் இடம்பெறும் அசௌகரியங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரியப்படுத்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வருடாந்த மஹோற்சவம்

சாவகச்சேரி —

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் சித்திரைவருடப் பிறப்பன்று காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் பிற்பகல் 2 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (29)

## பிரதேச செயலர் ரீதியாக 25 பேருக்கு வீடமைப்புக் கடன்!

யாழ்ப்பாணம் —

மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை 50 ஆயிரம் ரூபா வீடமைப்புக்கடன் வழங்கவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் - ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் கிராமத்தில் 25 வீடுகள் அமைப்பதற்காக 25 பயனாளிகளுக்கு வீடமைப்புக் கடனாக ரூபா 50 ஆயிரம் வழங்கப்படும். தற்போது பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வீடமைப்புக் கடன் வழங்குவதற்கான கிராமங்கள் தெரிவு இடம் பெற்றுவருகிறது.

இதேவேளை - இந்தத்திட்டத்தின் கீழ் வீடமைப்பு அதிகார சபையால் சண்டிலிப்பாய் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் ரூபா 100 லட்சம் செலவில் 20 வீடுகள் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள் ளன.

இந்த வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல்லை கடந்த 12 ஆம் திகதி அரச அதிபர் கே.கணேஷ் நாட்டிவைத்தார். அமைக்கப்படும் இந்த வீடுகள் மேற்படி இரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் வீடுகளற்ற, வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ரி)

## சிறுவர் உரிமைகள் தொடர்பான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை!

யாழ்ப்பாணம் —

யுனிசெப் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகிய தொண்டு நிறுவனங்களின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் அவர்களின் உரிமைகள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று நல்லூர் யூரோவில் நிறுவனத்தில் ஆரம்பமாகியது.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு உத்தியோகத்தர்களுக்கு - சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பாக அவர்களுக்குரிய கடமைகளை விளக்கும் வகையில் இந்துப் பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறுவர் பிரமாணங்களை நடைமுறைப்படுத்த அவசியமான கடமைகள், சுகாதாரத்துக்கும் விருத்திக்குமான சந்தர்ப்பங்களை உறுதி செய்யும் கடமைகள், சிறுவர் துஷ்பிரயோகமும் அவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறும்போது மேற்கொள்ளப்படவேண்டிய கடமைகள், பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர்களின் உரிமைகளை சூறையாடுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்தப் பயிற்சிப் பட்டறையில் விளக்கப்படவுள்ளது -

இதுதவிர, சிறார்களின் கல்வி தொடர்பான உரிமைகள் பேணுவோருக்கான கடமைகள், சிறுவர்களைத் தத்தெடுக்கும் பெற்றோரின் நிகழ்ச்சியும், செவன சரன நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங்கள் இடம்பெறுகின்றன. நேற்று ஆரம்பமான இந்தப்பயிற்சிப்பட்டறை இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. (ரி)

## துணைவேந்தரை நியமிப்பதில் இழுபறி; பல்கலைக்கழக செயற்பாடுகள் முடக்கம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு புதிய துணைவேந்தரை நியமிப்பதில் ஏற்பட்டுவரும் இழுபறிநிலையால் - பல்கலைக்கழக செயற்பாடுகள் பெருமளவில் முடங்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. குறிப்பாக மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமத நிலை ஏற்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

கலைப்பீடத்தின் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்குரிய முதலாம் அரையாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடக்கூடிய வகையில் தயார்நிலையில் உள்ள போதும், துணைவேந்தரின் அனுமதியைப் பெற்றபின்னரே பெறுபேறுகளை வெளியிட முடியுமென்பதால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், துணைவேந்தரின் அனுமதியுடன் செய்ய வேண்டிய பல செயற்பாடுகளும் முடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் கூலை நிய்மித்தபோதும் - பல்கலைக் கழக சமூகம் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாலும், பதில் துணைவேந்தராக பதவியேற்க ஏனையோர் பின்னடித்து வருவதாலும் யாழ். பல்கலைக்கழகம் துணைவேந்தர் இன்றி இயங்கிவருகிறது.

எனவே, புதிய துணைவேந்தர் நியமனம் தொடர்பான சர்ச்சைகள் தொடருமாயின் பல்கலைக்கழக செயற்பாடுகள் பெருமளவில் முடங்கும் ஆபத்தான நிலை உருவாகுமென பல்கலைக்கழக வட்டா ரங்கள் தெரிவித்தன. (து)


ஜெய் குருதேவ்

உலகப் புகழ்பெற்ற ஆன்மீகக் குரு



தமிழ்த்துறவி

தவத்திரு

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்

அவர்களின்

மகா சத்சங்கம்

(கானம், தியானம், ஞானம் இவைகள் சங்கமிக்கும் ஒரு இனிய மாலைப்பொழுது)

நாள்: 07.04.2006, வெள்ளிக்கிழமை, மாலை 5.30 மணி

இடம்: யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம்.

30 லட்சம் மக்கள் கலந்துகொண்ட, சர்வதேச வாழும் கலை நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிக்கு பிறகு குருஜி கலந்துகொள்ளும் முதல் சத்சங்கம். அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்

ஜாதி, மத, இன பாகுபாடின்றி அனைவரும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அன்பில் மலருங்கள்! உங்களை உணருங்கள்

அனுமதி இலவசம்

(நிகழ்ச்சி நிறைவில் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது)

[2238]

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம், யாழ்ப்பாணம்

தொ.பே: 0779059549 0779059544


## நமது ஈழநாடு சிறுவர் அரங்கம் - துருவன் நடத்திய

## போட்டி முடிவுகள்

### குறுக்கெழுத்துப் போட்டி இல.04

★ முதலாம் பரிசு - கனகசுந்தரம் கஜனி
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்.
(மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 500 பணப் பரிசு)

★ இரண்டாம் பரிசு - குணசேகரம் லஜந்தா
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்.
(இல.303, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறிமுருகன் தொலைத்தொடர்பகம், மூகவர் தபால் நிலைய நிறுவனத்தினரின் ரூபா 300 பணப் பரிசு)

★ மூன்றாம் பரிசு - கே.ஷியாமளன்
யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி.
(ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த அமரர் பரராஜசிங்கம் சுதன் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 200 பணப் பரிசு)

### பொது அறிவுப் போட்டி இல.04

★ முதலாம் பரிசு - குணசேகரம் டுவாரதா
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்.
(காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் திருமுருகன் கொம்நெற் நிறுவனத்தினர் வழங்கும் ரூபா 300 பணப் பரிசு)

★ இரண்டாம் பரிசு - அன்ரனிலாவோஸ் மேரி றிசோதா
யா/ செம்பியன்பற்று றோ.த.க. பாடசாலை.

★ மூன்றாம் பரிசு - சற்குணநாதன் சிந்துஜா
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்.
(காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆர்வணிக நிலையத்தினரின் ரூபா 200, 100 பெறுமதியான பணப் பரிசில்கள்)

பரிசு பெறும் அதிஷ்டசாலிகளுக்கு எமது பாராட்டுக்கள். இவர்கள் தங்களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றினைச் சமர்ப்பித்து ஞாயிறு மற்றும் விடுமுறை நாள் தவிர்ந்த ஏனைய நாட்களில் எமது அலுவலகத்துக்கு வந்து தமது பரிசுக் கூப்பன்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- பிரதம ஆசிரியர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குடாநாட்டு வான்பரப்பில் அடிக்கடி பறந்த ஹெலிகள்

யாழ்ப்பாணம்

நேற்று யாழ். குடாநாட்டின் வான்பரப்பில் ஹெலிகள் அடிக்கடி பறப்பில் ஈடுபட்டதால் பொதுமக்களிடையே பரபரப்புக் காணப்பட்டது.

கடந்த சில நாட்களாக குடாநாட்டின் வான்பரப்பில் விமானப்படை ஹெலிகள் மிகத் தாழ்வாக அடிக்கடி பறப்பில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் வீடுகளிலுள்ள குழந்தைகள், சிறுவர்கள் பெரும் அச்சத்துக்குள்ளாகியுள்ளதுடன் - பொதுமக்களிடையேயும் கடந்த கால போர்ச் சூழ்நிலைகளின்போது போர் விமானங்களின் இரைச்சல் போன்ற அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய தினம் மட்டும் ஐந்து தடவைகளுக்கு மேல் குடாநாட்டின் வான்பரப்பில் ஹெலிகள் பறப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# புதுவருடத்துக்கு பின்னரே சாதாரணதர பரீட்சை முடிவு

கொழும்பு

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் சித்திரைப் புதுவருடத்தின் பின்னர் வெளியிடப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

சாதாரண பரீட்சை முடிவுகளை உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் வெளியிடுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்திருந்தது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை அடுத்த மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் 15 ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு பின்னர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் சகல அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று மூடப்படவுள்ளன.

பின்னர் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் 24 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் பாடசாலைகளின் நடவடிக்கைப் பணிப்பாளர் என் தர்மசேன தெரிவித்தார். (01)

# சுதந்திரக்கட்சியின் தலைவராக மகிந்த இன்று தெரிவாகலாம்!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம், கட்சியின் துணைத் தலைவராக அமைச்சர் அநுர பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், விரைவில் பிரதமர் பதவியில் மாற்றம் கொண்டுவரப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்று இரவு அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் 69 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கட்சியின் தலைவராக தெரிவுசெய்வதற்கான யோசனை இன்று நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 16 ஆவது சம்மேளனக்கூட்டத்தில் அங்கீகாரம் பெறுவதற்காக முன்மொழியப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், 1956 ஆம் ஆண்டில் ஆரம்பித்த பண்டாரநாயக்க யுகத்தின் 50 வருட பூர்த்தியாகும் நிலையில் - மகிந்த சிந்தனை என்ற புதிய யுகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (01)

### சமாதான...

மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர். இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

சமாதான முயற்சிகளில் எரிக் சொல்ஹெய்ம் காட்டிய அக்கறையைப் போன்று தாமும் சமாதானத்தைக் கொண்டுவர முயற்சிப்பதாக புதிய சமாதானத் தூதர் ஜோன் ஹன்சன் பௌயர் மேலும் தெரிவித்தார். (01)

### நோர்வேக்கு...

பிரிவு தெரிவித்துள்ளது. முன்னதாக தேசிய பிக்கு முன்னணி நோர்வேயை வெளியேற்ற வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தது குறிப்பிடத்தக்கது.

### கண்காணிப்புக்...

முதலாம் திகதி பொறுப்பேற்றதன் பின்னர் உல்ப் ஹென்றிக்சன் கிளிநொச்சியில் புலிகளின் பிரதிநிதிகளை முதற்தடவையாக சந்திக்க வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏற்கனவே தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு முன் இவர் அறிமுக சந்திப்புக்களை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## நாணயமாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | ரூ 101.99 | ரூ 103.04 |
| ஸ்ரேலிங் பவுண் | ரூ 178.30 | ரூ 181.01 |
| யூரோ | ரூ 124.87 | ரூ 126.99 |
| சுவிஸ் பிராங் | ரூ 78.85 | ரூ 80.77 |
| அவுஸ்ரேலிய டொலர் | ரூ 73.78 | ரூ 75.49 |
| ஜப்பானிய யென் | ரூ 00.87 | ரூ 00.89 |

மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களின் சுட்டிய விலைகள்

| | |
|---|---|
| பஹ்ரேன் டினாரின் சுட்டிய விலை | ரூ 272.02 |
| குவைத் டினாரின் சுட்டிய விலை | ரூ 351.12 |
| ஓமான் றியாலின் சுட்டிய விலை | ரூ 266.17 |
| சவுதி றியாலின் சுட்டிய விலை | ரூ 27.34 |
| ஐக்கிய அரபு ராச்சிய திர்ஹாமின் சுட்டிய விலை | ரூ 27.97 |

பருத்தித்துறை வைத்[illegible] ஊழியர்கள்

# காவலாளி தாக்கப்பட்டதைக் கண்டித்து இரண்டு மணிநேரம் பணிப்புறக்கணிப்பு

நெல்லியடி

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை காவலாளி, நோயாளி ஒருவரின் உறவினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று இரண்டு மணிநேரம் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை வைத்தியசாலையில் கடமையில் இருந்த போது காவலாளி தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்றுக்காலை 10 மணி முதல் 12 மணி வரையான இரண்டு மணிநேரம், வைத்திய அதிகாரி உட்பட அனைத்து ஊழியர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 9.10 மணியளவில் கடமையிலிருந்த காவலாளி - நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக வந்த நபர்களால் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டு காயப்படுத்தியதற்கும், வைத்தியசாலை சொத்துக்களை சேதப்படுத்தியதற்கும் எதிர்ப்புத்தெரிவித்து வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டதால் வைத்தியசாலைச் செயற்பாடுகள் இரண்டு மணிநேரம் ஸ்தம்பிதம் அடைந்ததாகத் தெரியவருகிறது.

இந்தச்சம்பவம் பற்றி [illegible] தெரியவருவதாவது: -

அவசரநோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தவரை பார்வையிடுவதற்கு அனுமதிக்குமாறு காவலாளியிடம் கேட்டபோது - அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டவரை பார்வையிட முடியாது என காவலாளி தெரிவித்தார்.

அவர்கள் காவலாளியை தாக்கி விடுவோம் என்று பயமுறுத்திய போதும் - அனுமதிக்காததால் அவரை மிகவும் மோசமாகத் தாக்கிவிட்டு உள்ளே சென்று சிகிச்சை பெற்றவரை பார்வையிட்டனர்.

தாக்குதலுக்கு இலக்கான காவலாளியான கணபதி சின்னராசா (வயது 50) என்பவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, காவலாளி தாக்கப்பட்ட சம்பவம் பருத்தித்துறை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட பின்னர் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டோரை பொலிஸார் கைதுசெய்திருப்பதாக தெரியவருகிறது. (12)

# பௌயர் - ஹக்கீம் நேற்று சந்திப்பு

கொழும்பு



நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஜோன் ஹன்சன் பௌயர் நேற்றுக் காலை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ரவூப்ஹக்கீம் எடுத்துக் கூறியதாகவும், அத்துடன் பேச்சுக்களில் முஸ்லிம் தரப்புக்குத் தனித்தரப்பு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென்றும் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆட்லறி...

நடத்திய குழுவில் இராணுவத்தினரும் உள்ளடங்கியிருந்ததாக கண்காணிப்புக்குழுவுக்கு எழுதிய கடிதத்தில் எழிலன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தில், போர் நிறுத்த உடன்பாட்டை பாரிய அளவில் மீறும் செயல் இது என எழிலன் தெரிவித்துள்ளார்.

### வெளியுறவு...

ராஜபக்ஷவும் புதுடெல்கி செல்லவிருந்த போதும் கடைசி நேரத்தில் இவரது பயணம் ரத்துசெய்யப்பட்டது.

புதுடெல்கி சென்றுள்ள பாலிகஹார தலைமையிலான குழுவினர்- இந்திய வெளிவிவகார அமைச்சக அதிகாரிகளைச்சந்தித்து ஜெனிவாவில் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் குறித்து விளக்கமளிக்கவுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதுடெல்கிக்கு விஜயம் செய்து இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்த இரண்டு தினங்களுக்குள் இலங்கை அதிகாரிகள் குழு அங்கு சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நோர்வே விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரும், எரிக் சொல்ஹெய்மும் இன்று புதுடெல்கிக்கு விஜயம் செய்து சமாதான முயற்சிகள் குறித்து இந்திய அரசுத்தலைவர்களுக்கு விளக்கமளிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கை...

நிலைக்குக் கொண்டுவரப்படவுள்ளது. மின்சார நெருக்கடிக்ளின் காரணமாக 1996 ஆம் ஆண்டு இலங்கையின் நியம நேரத்தை அரசாங்கம் ஒரு மணித்தியாலத்தால் முன் நகர்த்தியது. பின்னர் இது அரை மணி நேரமாகக் குறைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையின் வரலாற்றில் 1880 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆறாவது தடவையாக இந்த நேரமாற்றம் அமுல்படுத்தப்படுகிறது.

AIMS
Vacation @ AIMS
விடுமுறையை பயனுள்ளதாக்குங்கள்
AIMS உடன் இணைந்து
மேலதிக விபரங்களுக்கு 08-04-06ற்கு முன்னர் அலுவலகத்தை அணுகவும்
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி திருநெல்வேலி
Center for FOSS & LAMP

# புலிகளுக்கு பாதுகாப்பு...

புலிகள் முன்வைத்த கோரிக்கை காரணமாக சமாதானப் பேச்சுக்கள் இந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகுமா என்ற சந்தேகம் நிலவியதாகவும் குறிப்பிட்ட எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த உத்தரவாதத்தையடுத்து பேச்சுக்கள் நடைபெறுவதற்கான சூழல் உருவாகியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பெப்ரவரி மாதம் நடைபெற்ற பேச்சுக்களுக்குப் பின்னர் 2 முக்கிய விவகாரங்கள் முதன்மை பெற்றுள்ளன. கடற்படைப் படகு மீதான தாக்குதல் மற்றும் துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களையுமாறு விடுதலைப் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருவது குறித்த விடயங்களே அவையாகும்.

கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் தீவிரமாக இடம்பெற்ற வன்முறைகள் ஜெனிவா பேச்சுக்களுக்குப் பின்னர் பெரிதும் வீழ்ச்சி கண்டிருக்கிறது. ஆனால், இந்த வன்முறைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டுமெனவும் எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

நேற்று மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல் நடத்திய எரிக் சொல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அவரது ஆலோசகர் பாலித கொகன்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# புனர்வாழ்வுக்கழக...

எதுவித தகவலும் இல்லை. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் ஜெனிவாவில் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு முன்னர் தாங்கள் கடத்தப்பட்டவர்களைத் தேடி வெலிக்கந்த - தீவுச் சேனைக்கு சென்ற வேளை, ஆயுதக் குழு ஒன்று இருந்ததாகவும் அங்கிருந்து ஒரு மைல் தொலைவில் இராணுவத்தினரின் முகாம்கள் இருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட தமது உறவினர்களை விடுதலை செய்யும்படி அங்கிருந்த ஆயுதக்குழுவிடம் தாங்கள் வேண்டுகோள் விடுத்தபோதிலும் - கடத்தப்பட்ட எவரும் தங்களிடம் இல்லை என்று அவர்கள் கூறினர்.

தொண்டர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. எனினும் அவர்கள் இது தொடர்பாக மௌனம் சாதித்து வருகின்றனர்.

அதேவேளை, கடத்தப்பட்டவர்கள் தொடர்பாக வெலிக்கந்த பகுதிக்குச் சென்று ஆராயுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டபோது - அந்தப் பிரதேசங்களுக்குச் செல்வதற்கு தங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

புத்தாண்டை முன்னிட்டு திருமுருகன் கொம் நெற் வழங்கும் விசேட சலுகைகள்
FedEx Express
இன் புத்தாண்டு விசேட சலுகைகளை
நீங்கள் அனுப்பும் கடிதங்கள், பொதிகள்
எவையாயினும் 10% விசேட சலுகைகளுடன்
முதலாம் பரிசு தங்க நாணயம் மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்
சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=
லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=
குறிப்பு: இந்தச் சலுகை புத்தாண்டு வரை மட்டுமே.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836
Tel - 021 222 7560 Fax - 021 222 7310
Tel - 021 226 4252 Fax - 021 226 4253
Tel - 021 222 2027 Fax - 021 222 2993
வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.
யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.